28 SEP 1999
23 SEP 1999


இலங்கையில் செய்திப் பத்திரியாக பதிவு செய்யப்பட்டது. Registered sa a Newspaper at the GP

# புதிய கண்ணோட்டம்

PUTHIYA KANNOTTAM

පුදිය කණ්ණෝට්ටම්

வெளியீடு: 49 | 05 புரட்டாதி 1999 | விலை: ரூபா 7.00










# அதிகாரப் போரில் யாருக்கு வெற்றி?

பொதுஜன ஐக்கிய முன்னணியும், ஐ.தே.கவும் தோள் தட்டிக் கோதாவில் இறங்கி உள்ளன. அடுத்த ஆண்டு தேர்தல் ஆண்டான படியால் இப்போது தொடங்கி விட்டார்கள்.

ஜனாதிபதி தேர்தல் என்று வரும்போது ரணில் உடன் ஒப்பிடுகையில் ஜனாதிபதி சந்திரிகா கவர்ச்சிமிக்க, பேச்சாற்றல் உள்ள, பிரபலமானவராகக் காணப்படுகிறார். அவரை சுற்றியிருக்கும் சிலர் எப்படியோ அவர் அப்பளுக்கில்லாதவர் என்ற ஒரு அபிப்பிராயம் உண்டு.

அந்த ரீதியிலேயே 9வது அலைவரிசைப் பிரச்சினை கிளப்பப்பட்டு லக்ஸ்மன் குலுகல்ல, லசந்தா விக்கிரமசிங்க, சனத் குணதிலக, ஜனாதிபதி சந்திரிகா என பெயர்கள் அடிபட்டன, தென்னாசியாவில் ஊழல் குற்றச்சாட்டுக்கள் அரசியல் எதிரிகளுக்கெதிராக பாவிக்கப்படும் ஒரு முக்கிய ஆயுதம்.

இந்தியாவில் ராஜீவ்காந்தி அவர்களுக்கெதிராக கொண்டுவரப்பட்ட போபர்ஸ் பீரங்கி பேர குற்றச்சாட்டு, பாகிஸ்தானின் பெனாசீர் பூட்டோ குடும்பத்தினருக்கெதிரான ஊழல் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டன. இக்குற்றச்சாட்டுக்களில் எந்தளவு உண்மை இருக்கிறதோ இல்லையோ இவை பற்றி அந்நாட்டு நீதிமன்றங்கள் தான் முடிவு செய்ய வேண்டும்.

ஐ.தே.கட்சி 9வது அலைவரிசை விவகாரத்தை ஒரு பெரிய இயக்கமாக கொண்டு செல்ல முயற்சித்தது.

இவை எல்லாவற்றையும் விட இந்த நூற்றாண்டில் இறுதிப்பகுதி நகைச்சுவையாக ஜனாதிபதி முறையை நீக்குமாறும் தெருவில் இறங்கி ஆர்ப்பாட்டம் நடத்தியது.

பாராளுமன்றத் தேர்தலில் இருக்கக்கூடியதைவிட ஜனாதிபதித் தேர்தலில் வாய்ப்புக்கள் குறைவாக இருப்பதும் அதனை நீக்கச் சொல்வதற்கு காரணம். வெறும் தேர்தல் நோக்கங்களுக்காகவே ஐ.தே.க கோரிக்கைகளை முன்வைக்கிறதே தவிர இலங்கையில் அரசியல் கட்டமைப்பு ஜனநாயகமயப்படுத்தப்படவேண்டும் என்ற நன் நோக்கிலிருந்தல்ல.



அலரிமாளிகை சுற்றாடலையும், லிப்ரன் சுற்றுவட்டத்தையும் ஐ.தே.கவினர் கொஞ்ச நாட்களாக பரபரப்பாக்கினர்.

பத்திரிகையாளர்களின் உரிமைகள் பற்றியும் வீதியில் நின்று குரல் கொடுத்தார்கள். ஜனாதிபதி பாதுகாப்புப்பிரிவினரால் தாக்கப்பட்டதாக ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருந்த ஐ.தே.க காரர்களை பத்திரிகைகள் பெரிதாக விளம்பரப்படுத்தயிருந்தன. றேணுகா ஹேரத்தின் கழுத்துப்பகுதியிலிருந்த தளும்பு கூட பத்திரிகைகளில் பெரிதாக விளம்பரப்படுத்தப்பட்டிருந்தது.



இந்த பத்திரிகைக்காரர்களுக்கு சமுதாயத்தில் மிக உயர்ந்த மட்டத்திலிருக்கும் இந்த அரசியல் வாதிகளுக்கு நடக்கும் சிறு பிரச்சினைகள் கூட முக்கியமானதாக தெரியும்.

ஆனால் நாளாந்தம் வட–கிழக்கில் எந்தனை தமிழர்கள் தாக்கப்படுகிறார்கள்! எத்தனை பேர் அவமானத்துக்குள்ளாக்கப்படுகிறார்கள்! எத்தனை பேர் செத்துக்கொண்டிருக்கிறார்கள் எத்தனை பேர் செய்யாத குற்றத்திற்காக சித்திரவதைகளை அனுபவிக்கிறார்கள். இவை பற்றியெல்லாம் எதுவுமே தெரிவதில்லை.

சீமான்களுக்கும், சீமாட்டிகளுக்கும் காலில் ஒரு சுளுக்கேற்பட்டாலும் இந்த வெட்கங்கெட்ட பத்திரிகைகளுக்கு ஒரு முக்கியமான செய்தி.

இந்த ஐ.தே.க வினர் தான் சட்டபூர்வ இராணுவ பொலிஸ் இயந்திரங்களுக்குப் பதிலாக நவீன ஆயுதமேந்திய குண்டர் குழுக்களை உருவாக்கியவர்கள்.

ரயர் மாலை கலாச்சாரமும் அவர்களால்தால் உருவாக்கப்பட்டது. ஏன் புதைகுழி அரசியலுக்குக்கூட அவர்கள்தான் பிதாமகர்கள். இன்று படையினருக்கும், பொலிசாருக்கும் இருக்கும் தமிழர்கள் என்றால் என்னவும் செய்யலாம் என்ற மனோபாவம் அவர்களால்தான் உருவாக்கப்பட்டது.

மனித உயிர் மலிவானது அவர்களின் காலத்தில்தான். ஆனால் இன்று புதுக்கதை விடுகிறார்கள் தாம் ஏதோ நாகரீகமான ஆட்கள் என்பது போல.

இப்போதைக்கு ஜனாதிபதி முறையை இல்லாதொழிப்பதை விரும்பும் இவர்கள் அதிகாரப்பரவலாக்கலை விரும்பவில்லை.

இந்த தேர்தலில் தமிழ் மக்களின் ஆதரவு தேவை என்பதற்காக அரசு புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்த வேண்டும் என்கிறார்கள். அந்தப் பேச்சுவார்த்தை உடனடியாக சாத்தியப்படக்கூடியதல்ல என்பதும், அவ்வாறு நடந்தால் கூட எதுவும் சாதிக்கப்பட மாட்டாது; முறிவடைந்து விடும் என்பதும் ஐ.தே.க வுக்குதெரியும்.

ஆனால் பொதுஜன முன்னணி அரசு மக்களுக்களித்த வாக்குறுதிகளில் எவை சாதிக்கப்பட்டன என்பது மக்கள் முன்னுள்ள முக்கிய கேள்வியாகும் அந்த அதிருப்திகள் சகல அரச துறைகளிலும் வேலை நிறுத்தங்களாக உருவெடுத்துள்ளன.

ரயில்வே வேலை நிறுத்தம், பஸ் சொந்தக்காரர் வேலை

தொடர்ச்சி 3ம் பக்கம் ☞

## மக்களின் அபிலாசை

அழிவின் விழிம்பில் நிறுத்தப்பட்டிருக்கும் தமிழ்ச் சமுதாயத்தின் அபிலாசைகளை பூர்த்தி செய்யக் கூடிய தீர்வொன்று என்ன விலைகொடுத்தாவது உடனடியாக எட்டப்படவேண்டும் என்ற அவசியம் முன்னெப்போதையும் விட அதிகமாக உணரப்படுகிறது.

சமூகம் உயிர், உடைமைகளை மாத்திரம் இழக்கவில்லை சமூகக் கட்டமைப்பே சிதறுண்டு போய்விட்டது. உள்ளூரில் இடம்பெயர்ந்தவர்கள் இந்தியாவுக்கும் பிறநாடுகளுக்கும், நாட்டின் பிறபகுதிகளுக்கும் இடம்பெயர்ந்தவர்கள் என முடிவில்லாத் துயரத்தின் சொந்தக்காரர்களாகவே எமது சமூகத்தினர் வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள்.

இந்த நிலை இப்படியே தொடர்ந்து கொண்டிருக்க நாம் அதுதான் வழமை என்று சும்மா இருக்கப்போகுகிறோமா? அல்லது இந்த அழிவுப் பயணத்தைத் தடுத்து நிறுத்தி எமது மக்கள் நிம்மதியாக, கௌரவமாக வாழக்கூடிய சூழ்நிலையை உருவாக்கப் பாடுபடப்போகிறோமா? இன்று நடக்கும் ஒவ்வொரு சம்பவத்திற்காகவும் ஒரு சம்பிரதாய அறிக்கையோடு அரசியல் கட்சிகள் விடயங்களை முடித்து விடப்பார்க்கின்றன. தற்செயலாக ஏதும் நடந்தால் அந்த அறிக்கையால் ஏற்பட்ட மாறுதல் என்றும் உரிமை கோரப்படலாம்.

சமூகத்திற்கு உருப்படியாக ஏதும் செய்ய முயற்சிப்பவர்கள் தேடித்தேடி அழிக்கப்படுகிறார்கள். யாராவது ஒருவர் தமிழ் மக்களின் இன்றைய பிரச்சினைகளுக்கு உருப்படியான ஒரு தீர்வு வேண்டுமென உள்ளுணர்வு உந்துதலால் முயற்சிகள் ஏதும் மேற்கொண்டால் அவர் தேடி அழிக்கப்படுவார்.

சமூகத்திற்கு நல்லது செய்ய முற்படுபவர்கள் எல்லோரும் இத்தகைய கொடூரமரணங்களுக்கு ஆளாகவேண்டிய நிலை.

அதே போல் பல்வேறு போக்குவரத்து நெருக்கடிகளுக்குள் வாழும் யாழ் குடாநாட்டு மக்களுக்கு போக்குவரத்துச் சிரமங்கள் சற்றுக்குறையும் போது நடுவானில் பயணிகள் விமானம் சுட்டுவீழ்த்தப்படுகிறது.

நீண்ட காலமாக மின்சாரத்தை காணாத கிராமங்களில் சாடைமாடையாக மின்சார விளக்குகள் மின்னத்தொடங்கினால் எங்கே மாணவர்கள் கல்வி நடவடிக்கைகளில் தீவிரமாக ஈடுபட்டுவிடுவார்களோ எங்கே சனங்களின் வாழ்க்கை இலகுவாகிவிடுமோ என்று மின்மாற்றிகள் தகர்க்கப்படுகின்றன.

சமூகத்தின் நீண்ட கால தேவையான அரசியல் தீர்வு மாத்திரமல்ல அன்றாட பௌதிக தேவைகளுக்கான முயற்சிகளும் அழிக்கப்படுகின்றன. இதையே சாட்டாக வைத்துக்கொண்டு தீர்வு முயற்சிகள் இழுத்தடிக்கப்படுகின்றன.

துரதிஸ்டம் என்னவென்றால் தீர்வுத்திட்ட யோசனைகள் தமிழ் முஸ்லீம் மக்களுக்கு பயன்பட்டனவோ இல்லையோ சர்வதேச பிரச்சாரத்துக்கு நன்கு பயன்படுகின்றன.

இப்போது நாம் செய்ய முயற்சிக்க வேண்டியது இதுதான். தீர்வுத்திட்ட யோசனைகளை நடைமுறை வடிவத்துக்கு கொண்டுவர முயற்சிப்பதே. தற்போதைய தேய்ந்து போன தீர்வுத்திட்டத்தை அல்ல. செழுமைப்படுத்தி அதனைச் செய்தாகவேண்டும்.

ஆளும், எதிர்க்கட்சிகள் தேர்தலை நோக்கிய பலப்பரீட்சையில் இறங்கியிருக்கும் இவ்வேளையில் தமிழ்க்கட்சிகளும் எல்லாவற்றையும் ஒதுக்கிவைத்து விட்டு தேர்தலை முதல்நோக்கமாக கொள்ளக்கூடும்.

தமிழ் மக்களின் முதலும் முக்கியமானதுமான அபிலாசை எது என்பதைப்புரிந்து கொள்ளவேண்டும். அவர்கள் கௌரவமான தீர்வை, நிம்மதியான சமாதான சகவாழ்வை விரும்புகிறார்கள்.

மக்களின் இந்த அபிலாசைகளுக்காக மூச்சாக நிற்பதே தமிழ் கட்சிகளினதும், சமூக ஜனநாயக சக்திகளதும் இன்றைய வரலாற்றுக்கடமையாகும்.

## துணிவு, தன்னம்பிக்கையுடன் முன்னே வருக!

# தமிழர் விடுதலைக்கூட்டணியின் தலைமைப்பீடத்திற்கு!!

அடுத்தடுத்த பலரை அநியாயமாகப் பறிகொடுத்து ஆழ்ந்த கவலையில் வாடிப்போயிருக்கும் உங்களுக்கு ஆழ்ந்த அனுதாபங்கள்.

தமிழ் பேசும் மக்களின் நீண்ட நெடிய வரலாற்றில் குறிப்பிடத்தக்க பங்கை வகித்துள்ள உங்களின் ஜனநாயகக் குரலை முடக்க எடுக்கப்பட்டுவரும் முயற்சிகள் குறித்து மிகுந்த வேதனை. எனினும் இந்த நிலமை இன்று நேற்று ஏற்பட்டது அல்ல.

1986ல் தருமரும், ஆலாலும் சிந்திய குருதி இன்னமும் உறைந்து போகவில்லை என்பதையே அண்மையில் நீலனின் உயிர் பறிக்கப்பட்டமையும் எடுத்துக்காட்டுகிறது.

அன்று முதல் இன்று வரை உயிர்கள் பறிக்கப்படும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் உயிரை எடுத்தவர்களை திருப்திப்படுத்தி சமாதானமாக்கிடவே நீங்கள் முயற்சி எடுத்து வருகிறீர்கள். இந்த முயற்சியில் நீங்கள் இதுவரை வெற்றி பெறவில்லை. இனிமேலும் வெற்றி பெறப்போவதில்லை என்பதே என் போன்றவர்களின் எண்ணம்.

அரசியல் பொது வாழ்வு என்பது இருபது வருடங்களுக்கு முன்னர் ஓய்வு நேர வேலையாக-பொழுது போக்குக்கான ஒரு பங்களிப்பாக இருந்திருக்கலாம். வருமானத்தையும், சமூக மதிப்பையும் ஈட்டித்தரும் ஒரு துறையாக இருந்திருக்கலாம்.

ஆனால் ஆயுதப்போர் அகலக்காலூன்றிய பின்னர் அரசியல் வாழ்வு என்பது முழுநேரப் பணியாகி பாதுகாப்பையும் கேள்விக்குரியதாக்கியுள்ளது. பதவிகளின் சுகங்களை விடவும் சுமைகளே அதிகமானதாகியுள்ளது.

இந்த அடிப்படை உண்மையைப் புரிந்து கொள்ளாமல் ஆயுதங்கள் எடுத்தவர்கள் சிந்தும் குருதியையும், சொரியும் வியர்வையையும் அரசியல் பேரத்திற்கான மூலப் பொருளாகக் கொள்வது பொருத்தமானதல்ல.

அரசியல் போராட்டம் என்பது ஆயுதப் போர் மட்டும்தான் என்ற எல்லைக்குள் குறுக்கிக்கொள்ள இடமளிக்கப்பட்டமையின் விபரீதமான விளைவுகள் இன்றைய படுகொலைகள்.

மாற்றுக் கருத்துக்களுக்கும் மதிப்பளிக்க வேண்டும் என்ற மனப்பாங்கை வளர்த்துக்கொள்ளலாமல் ஏகப் பிரதிநிதித்துவ எண்ணங்களுக்கு துணை போனால் அரசியல் இருப்பைத்தக்க வைத்துக்கொள்ளலாம் என்ற கருதுகோள் சிதறடிக்கப்பட்டுள்ளது. கின்ஸி வீதிச் சந்தியில் வெடிக்க வைக்கப்பட்ட குண்டின் எதிரொலி இதுவாகத்தான் இருக்க முடியும்.

எனவேதான், உண்மைகளை உண்மைகளாக வெளிப்படையாக எடுத்துரைக்க நீங்கள் இனியும் தயங்கக்கூடாது என்ற அழுத்தம் உங்களின் மேல் அதிகரித்து வருகிறது. அரசியல் தலமைகளின் பாதுகாப்பு என்பது மக்கள் மத்தியிலுள்ள செல்வாக்கின் மூலமே உறுதிப்படுத்தப்படமுடியும். துணிவுடனும், தன்னம்பிக்கையுடனும் மக்கள் அரங்கில் நின்று அரசியல் ஈடுபாடு என்பது பொதுநல சேவை அடிப்படையிலேயே அமைகின்றது என்பதை தெளிவுபடுத்த வேண்டிய தேவை உங்களுக்கு வந்துள்ளது.

நீங்கள் பொது மக்களின் நலவாழ்வு என்ற பரந்த எண்ணத்தின் அடிப்படையில் சேவையாற்றுகிறீர்கள் என்பதைப் பொது மக்கள் உணரும்போது உங்களின் பாதுகாப்புக் கவசங்களாக மக்களே மாறுவார்கள்.

அதனை விடுத்து பாதுகாப்பு என்ற காரணத்திற்காக மக்களிலிருந்து அந்நியப்பட்டு எவரையும் சந்தேகப்பட்டு தனிமைப்பட்டுப் போவதால் உங்களை மட்டுமல்ல நீங்கள் சாதிக்க விரும்புகின்ற நல்ல விடயங்களைக் கூட சாதிக்க முடியாமலேயே போய் விடலாம் என்று அஞ்சுகிறோம்.

தாக்குதல் தான் தற்காப்பிற்கான சிறந்த வழி என்பது இலங்கை மனிதனுக்கு உணர்த்தும் பாடம். தன்னைக்கொல்ல வரும் பசுவையும் கொல்லலாம் என்பது பொது விதி. கண்ணுக்குப் புலனாகாமல் உங்களை வளையவரும் எதிரிகளை இனங்காண்பது உங்களுக்குக் கடினமாக இருக்காலம்.

ஆனால் தனிநாடு என்பத எய்தப்படக்கூடிய இலக்கு அல்ல, ஆயுதப் போர் அழிவுகளை மட்டுமே தருகிறது, அடிப்படை பிரச்சினைகளை விடவும் அன்றாட நெருக்கடிகளே அதிகமாக அலக்கழிக்கிறது, என்பன போன்ற விடயங்களை உணர்ச்சிகளுக்கு இடம் தராமல் மக்களுக்கு உணர்த்தும் பாரிய பொறுப்பு உங்களது தோள்களில் உண்டு.

இந்தப் பணியை நீங்கள் முன்னெடுக்க முனைவீர்களேயானால் அனைத்து தரப்பினரும் ஐக்கியப்பட்டு கை குலுக்கிக் கொள்ளும் சூழ்நிலையை நீங்கள் உருவாக்கிக் கொள்ளலாம். அதில்லாமல் தேர்தல் வெற்றிகள் பற்றிய கனவுகளிலும், கற்பனைகளிலும் மூழ்கிக்கொண்டு காலத்தைக் கடத்துவீர்களாயின் இருண்டு போயிருக்கும் எதிர்காலத்தின் மீது ஒளிக்கதிர்கள் வீசுவது கடினமானதாகவே இருக்கலாம்.

**சிவலிங்கம்**
**ஆவரங்கால்**

## தோழர்களே, நண்பர்களே, வாசகர்களே!

உங்களிடமிருந்து அபிப்பிராயங்கள், விமர்சனங்கள், ஆலோசனைகளையும், ஆக்கங்களையும் புதிய கண்ணோட்டம் வரவேற்கிறது.

அனைத்து நேரடித் தொடர்புகளுக்கும்:

**புதிய கண்ணோட்டம்**
**த.பெ.இல: 442**
**கொழும்பு**

E.P.I.C., Box No: 95,
95144, GargesLes,
Gonnesse Cedex,
France.

B.M.Box: 1738,
London-WCIX-3NN,
U.K.

Post Bag: 1041,
Madras-17,
India.

P.Fach: 506,
Bern-17,
Switzerland.

54, மாணிக்கவாசகர் வீதி,
திருகோணமலை.
☎ 026-22858

310, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
☎ 021-2022

P.Fach: 66,
59514 Welver,
Germany.

பள்ளிமுனை வீதி,
உப்புக்குளம்.
மன்னார்.
☎ 023-2370

29A, வாவிக்கரை வீதி-1,
மட்டக்களப்பு.
☎ 065-22398

22, வெளிவட்ட வீதி,
வவுனியா.
☎ 024-22724

**மின் அஞ்சல் முகவரிகள் (E-mail Address):**

epic-sl@slt.lk - Colombo
csorg@slt.lk - Jaffna
epic-vu@sltnet.lk - Vavuniya
epiclondon@gn.apc.org - London
editor@epicnews.com - Canada
epic-g@t-online.de - Germany

**Web site Address :** http://www.epicnews.com

## அன்பிற்கினிய தமிழ் பேசும் மக்களே!

இந்த மண்ணில் நிம்மதியாக வாழமுடியுமா? என நாளாந்தம் நீங்கள் விடும் பெருமூச்சு கேட்கின்றது. ஆனால் சமாதானத்துக்கும் தமிழ் மக்களுக்கும் இடைவெளி அதிக தூரம் என்றே நடவடிக்கைகள் புலப்படுத்துகின்றன.

ஒரு விடுதலைப் போராட்டத்தில் தனது நண்பன் யார்? தனது எதிரி யார்? என்பதை விடுதலை இயக்கங்கள் சரியான முறையில் தீர்மானிக்கவில்லையாயின் நிச்சயமாக அப்போராட்டம் வெற்றியை நோக்கி முன்னேற முடியாது. எமது ஈழ விடுதலைப் போராட்டத்திலும் இது எதிரி யார் நண்பன் யார் என்பதை அறிந்து கொள்ளாத ஓர் போக்கே தொடர்ச்சியாக இருந்து வருகின்றது.



1980களின் ஆரம்பத்தில் TULF, EPRLF, EROS, TELO, PLOTE, LTTE போன்ற விடுதலை இயக்கங்களே தமிழ் மக்கள் மத்தியில் பிரபல்யம் வாய்ந்த தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்தை முன்னெடுக்கும் முன்னணிச் சக்திகளாகவும் விளங்கின.

இவற்றில் EPRLF, EROS, TELO, LTTE ஆகியன இணைந்து ஈழ தேசிய விடுதலை முன்னணி என்ற ஐக்கியப்பட்ட அமைப்பையும் தோற்றுவித்திருந்தன. இந்திய அரசினால் ஒழுங்கு செய்யப்பட்ட திம்பு பேச்சுவார்த்தையிலும் கூட இவை ஒரே குரலில் பேசின. ஆனால் அவ் ஐக்கியம் என்பது சொற்ப காலமே நீடித்தது.

1986 மேயில் முதலாவதாக தமிழீழ விடுதலை இயக்கம் புலிகளால் தடைசெய்யப்பட்டு அதன் தலைவர் சிறீசபாரத்தினம் உட்பட நூற்றுக்கணக்கான TELO போராளிகளும் படுகொலை செய்யப்பட்டனர். அதன் பின்னர் PLOTE இயக்கம் புலிகளால் தடைசெய்யப்பட்டது.

அடுத்ததாக 1986 டிசம்பரில் EPRLF இயக்கம் புலிகளால் தடைசெய்யப்பட்டதுடன் அதன் முன்னோடித் தலைவர்களும் போராளிகள் பலரும் இவர்களால் கொலை செய்யப்பட்டனர். மொத்தத்தில் தாம் ஆயுத வலிமை பெற்றவர்கள் என்ற ஒரே காரணத்திற்காக ஏனைய இயக்கங்களை அழித்தொழிக்க முற்பட்டதுடன், இவற்றை நியாயப்படுத்த அவ்வப்போது ஏதாவதொரு காரணத்தையும் குறிப்பிட்டு வந்தனர்.

ஆனால் இவர்களைத் தடை செய்வதை சந்தோசமாக வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த இலங்கை இராணுவம் திடீரென ஒரு நாள் "ஒப்பரேசன் லிபரேசன்" என்ற பெயரில் புலிகள் மீது தாக்குதலை ஆரம்பிக்க வடமராட்சியை விட்டு புலிகள் பின்வாங்க வேண்டி ஏற்பட்டதுடன், இந்தியாவின் பாதங்களில் உதவிக்காக விழுந்தது. உண்மையில் தமிழ்க் கட்சிகள் அன்று ஐக்கியமாக இருந்திருந்தால், இராணுவம், வடமராட்சியில் இறங்க பலதடவை யோசனை செய்ய வேண்டி ஏற்பட்டிருக்கும்.

ஆனால் ஏனைய தமிழ்க்கட்சிகளை தடைசெய்ததன் மூலம் ஒரு சாரார் புலிகளால் கொல்லப்பட, இன்னொருசாரர் உயிர் தப்பி வாழ்வதற்காக வெளிநாடுகளில் தஞ்சம் புகுந்தனர். மிகுதியில் ஒரு பகுதியினர் எப்படியாவது தமது இயக்கங்களை கொண்டு நடாத்துவது எனத்திட சங்கற்பம் பூண்டு மீண்டும் தமது இயக்கங்களை புனருத்தாரணம் செய்து வழிநடத்தத் தொடங்கினர்.

எனவே நண்பன் யார் எதிரி யார் என்று தெரியாத போக்கால், எதிரி எமது மண்ணில் கால்பதிக்க இடம் கொடுத்ததுடன், போராளிகளைக் கொலை செய்து குவித்ததால் போராளிகளும், இயக்க ஆதரவாளர்களுமாக ஆயிரக்கணக்கில் மக்கள் தஞ்சம் கோரி வெளி நாடுகளுக்கு ஓடினர்.

இதன் பின்னர் மீண்டும் வந்த இயக்கங்கள் பழி வாங்கப்புறப்பட புலிகளும் அதன் ஆதரவாளர்களுமாக, இன்னும் பலர் நாட்டை விட்டு ஓடினர். இம் மாறி மாறி பழிவாங்கும் போக்கு, முழு மக்களையுமே போராட்டத்தில் இருந்து அந்நியப்படுத்தியது. போராட்டத்தின் மீது விசனமும் அதிருப்தியும் ஏற்பட்டது.

தமது இனத்துக்குள், சமூகத்திற்குள் நண்பர்களை இனங்காணத் தவறியவர்கள் வெளி உலகிலும் தமது நண்பர்களை இனங் காணத்தவறினர். இதன் காரணமாக எமது போராட்டத்தின் உந்த சக்தியாகவும், ஆத்ம பலமாகவும் இருந்த இந்திய அரசின் பிரதமர் புலிகளின் தற்கொலைக் குண்டுத்தாக்குதலால், சென்னை ஸ்ரீபெரும்புதூரில் கொல்லப்பட்டார்.

இதனால் இந்தியாவின் நட்பையும் நாம் முற்று முழுதாக இழந்தோம். இன்று, இலங்கை இனப்பிரச்சினை உள்நாட்டுப் பிரச்சினை இதனை நீங்களே பேசித்தீர்த்துக்கொள்ளுங்கள், என்ற நிலைப்பாட்டிற்கு வர புலிகளே காரணமாக இருந்துள்ளனர்.

இவையாவும் ஒரு புறமிருக்க புலிகள் தவிர்ந்த எல்லோரும் துரோகிகள் என்றே முத்திரை குத்தப்படுகின்றனர். புலிகளை விமர்சிப்போர், அவர்களின் ஆணையை ஏற்காதோர், அவர்களுக்கு உதவி புரியாதோர் என்ற எல்லோருமே துரோகிகளாகவே கருதப்படுகின்றனர். இதன் காரணமாக பாடசாலை அதிபர்கள், அரச அதிபர்கள், புத்தி ஜீவிகள், ஏனைய கட்சித் தலைவர்கள், உறுப்பினர்கள் எனப்பலர் இவர்களால் கொல்லப்பட்டு வருகின்றனர். இதன் கடைசியாக திரு. நீலன் திருச்செல்வம் அவர்களும் கொல்லப்பட்டுள்ளார்.


இலங்கைத் தமிழ் சமூகத்தில் பல திறமைசாலிகளை நாம் அநியாயமாக இழந்துள்ளோம். இன்னும் பல திறமைசாலிகள் வெளிநாடுகளில் தஞ்சமடைந்து விட்டனர். கொலைப்பட்டியல் நீளும் பட்சத்தில் மிச்ச சொச்சமாக இருக்கும் புத்தி ஜீவிகளும் வெளியேறிவிடுவார்கள். இந்நிலையில் யாருக்காகப் போராட்டம் என்பதனையும் சற்று சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

அமிர்தலிங்கம், யோகேஸ்வரன், பத்மநாபா, சிறீசபாரத்தினம் போன்ற சகலருமே துரோகிகள் என்றால், இங்கு யார் தான் தியாகிகள் உள்ளார்கள். மாறுபட்ட கொள்கைகள், மாறுபட்ட உத்திகள் என்பவை சகஜமானதே.

இவற்றை ஒருமுகப்படுத்துவதும், ஐக்கியப்படுத்துவதும், பெரும்பான்மைகருத்துக்களை ஏற்றுக் கொள்வதுமே ஓர் சரியான விடுதலை இயக்கத்தின் வழிகாட்டுதலாக இருக்கமுடியும்.

மாறாக மாறுபட்ட கருத்துள்ளவர்கள் மாறுபட்ட சித்தனை உள்ளவர்கள், மாறுபட்ட கொள்கை உள்ளவர்கள், வேறுகட்சிகளில் இருப்பவர்கள் என்ற காரணத்திற்காக கொல்லப்படுவதென்பது, ஜனநாயக விரோதமானதும், சர்வாதிகாரமானதுமாகும்.

அண்மையில் ஏனைய கட்சிகளை கலைத்து விடும் படியும், அதில் உள்ளவர்களைத் தம்முடன் இணையும் படியும், விருப்பமில்லாதோர், தமது சொந்த வாழ்க்கையில் ஈடுபடலாம் எனவும் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.



TULF ஐச் சார்த்த கிழக்கு மாகாண பாராளுமன்றப் பிரதிநிதிகள் பொதுவைபவங்களில் பங்கு பற்றக்கூடாதென்பதுடன், அவர்களது அலுவலங்களை மூடிவிடும் படியும் உத்தரவிடப்பட்டுள்ளது.

நீலன் திருச்செல்வம் தற்கொலைக் குண்டுதாரியால் சின்னா பின்னமாக கொல்லப்பட்டு சதைப்பிண்டமாக்கப்பட்டுள்ளார். இதனைத்தானே சிறீலங்கா இராணுவம் புலிகளுக்கும் செய்கின்றனர். அப்படியாயின் சிறீங்கா இராணுவத்திற்கும் புலிகளுக்கும் என்ன வித்தியாசம்.

எனவே தமிழ் மக்களின் இக்கட்டான காலகட்டத்தைப் புரிந்தாவது, புலிகள் தமது கொள்கைகளில் மாற்றத்தை உருவாக்க வேண்டும். ஏனைய கட்சிகள் அரசின் அடிவருடிகள், இராணுவத்துடன் செயற்படுபவர்கள் என யாராவது கூறலாம்.

ஆனால் அதற்கான சூழ்நிலையைத் தோற்றுவித்ததும், அவர்களை அந்நிலைக்குத் தள்ளியதும் புலிகளே என்பதனை அவர்கள் ஏற்றுக்கொள்ளவேண்டும்.

எனவே இவர்களின் கொள்கையில் மாற்றம் வேண்டுமாயின் புலிகளின் கொள்கையிலும் மாற்றம் வேண்டும் என்பது தவிர்க்க முடியாதது. இல்லை, இவர்கள் எல்லோரும் துரோகிகள் எனத் தான் தொடர்ந்து செயற்பட விரும்புவார்களாயின், நிச்சயம் வரலாறு மாத்திரமல்ல மக்களும் அவர்களைக் கேள்வி கேட்பார்கள்.

அன்புடன்
சுரேஷ்

# அதிகாரப் போரில்...........

1ம் பக்கம் தொடர்ச்சி

நிறுத்தம், வட-கிழக்கில் ஆசிரியர்களின் சுகவீன லீவுப்போராட்டம், வேலையற்ற பட்டதாரிகள் போராட்டம் வைத்தியத்துறை, தேசிய தொழில்நுட்பத்துறை மாணவர்களின் போராட்டங்கள், டாக்டர்கள் தாதிமார் போராட்டம், வன்னிக்கு உணவு அனுப்பக்கோரி மக்கள் நடத்திய போராட்டங்கள், அதற்காதரவாக நடத்தப்பட்ட போராட்டங்கள், அரச கட்டுப்பாட்டுப்பகுதியில் அகப்பட்டுக்கொண்ட மக்கள் தமது சொந்த இடங்களுக்கு செல்ல நடத்திய போராட்டங்கள் என கடந்த மூன்று மாதங்களும் மக்களின் உளக்கொந்தளிப்பின் வெளிப்பாடுகள் காணப்பட்டன.

யாழ் குடாநாட்டு மீனவர்கள் உள்ளாடையுடன் தான் மீன் பிடிக்கலாம். விவசாயத்திற்கு அத்தியவசியமான முள்ளுவிறாண்டிகள், பிக்கான்கள், மண்வெட்டிகள் கூட யாழ், குடாநாட்டுக்கு கொண்டு செல்வதற்கே பாதுகாப்பு அமைச்சு அனுமதிக்கவில்லை என்று உலக உணவு ஸ்தாபனம் சில நாட்களுக்கு முன்னர் அறிவித்திருந்தது.

இதனால் அங்கு மேற்கொள்ளப்படும் அபிவிருத்தி திட்டங்களை இடை நிறுத்துவதாக கொழும்பில் உள்ள அதன் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்திருந்தர். இந்தகைய செயற்பாடுகள் தமிழ் மக்களை மேலும் மேலும் விரக்தியடைய வைத்துள்ளது.

அதிகாரத்துவ கட்டமைப்பு முழுவதும் இனவாத விசம் பரவி இருப்பதால் அற்பவிடயங்களில் கூட தமிழ் மக்களை அவமானப்படுத்தும், கஸ்ரத்துக்குள்ளாக்கும் நடவடிக்கைகளே மேற்கொள்ளப்படுகின்றன.

இவ் விடயங்களில் அரசாங்கம் விழிப்புடன் செயற்படாவிட்டல் எதிர்வரும் தேர்தல்களில் தமிழ்மக்களின் ஆதரவு கேள்விக்குரியதாகவே இருக்கும்.

தமிழ் கட்சிகள் இந்த விடயங்களில் உயிர்துடிப்புள்ள உடனடியான எதிர்ப்பை தெரிவிக்கக்கூடிய நிலையில் இல்லை. எல்லாமே புளித்துப்போன அல்லது மரத்துப்போன நிலை காணப்படுகிறது.

ஐ.தே.கட்சியின் ஆரவாரங்களையடுத்து அரச ஆதரவில் தீர்வுத்திட்ட யோசனைகளை அமுல்படுத்தக்கோரி ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றன.

ஆனால் ஐந்து வருடங்களில் அரசின் சாதனைகளை பட்டியல் இடும் அல்லது பிரச்சாரப்படுத்தும் பேரணி ஒன்று நடத்தப்பட்டது. பொதுஜன முன்னணி குறிப்பாக ஶ்ரீலங்கா சுதந்திரக்கட்சியினர் பட்டிதொட்டி எங்கும் ஆட்களை திரட்டி கொழும்பில் கொண்டு வந்து ஆகஸ்ட் 21ம் திகதி இறக்கினர்.

அத்தகைய ஒரு பேரணி கொழும்பில் அண்மைய வரலாற்றில் நடக்கவில்லை. அரசு தரப்பு பத்துலட்சம் பேர்வரை என்று கூறிக்கொண்டாலும் மூன்றரை லட்சம் பேர்வரை மக்கள் பங்குபற்றியிருக்கிறார்கள். இன்னும் கிராமங்களிலும் நகரங்களிலும் பொதுஜன முன்னணிக்கு ஆதரவுத்தளம் இருக்கிறது என்பது ஊர்ஜிதம் செய்யப்பட்டிருக்கிறது.

1994 பாராளுமன்றத் தேர்தல், ஜனாதிபதி தேர்தல், அதன் பின்னர் நடைபெற்ற உள்ளூராட்சித்தேர்தல்கள் எல்லாவற்றிலும் பொதுஜன முன்னணிக்கு தெளிவான வெற்றி கிட்டியது.

1999 மாகாணசபைத் தேர்தல் விளிம்பு நிலை வெற்றியாகத்தான் இருந்தது.

அந்த சூழ்நிலை இன்றுவரை நீடிக்கிறது என்பது உண்மையே ஆயினும் நடந்துமுடிந்த பேரணி பொதுஜன முன்னணியின் வெற்றி வாய்ப்புக்களை உறுதிப்படுத்துகிறது.

இந்தப் பேரணி மிகப்பெரிய முட்டாள்தனம் என பத்திரிகைகள் முன்னரே எழுதியபோதும் எந்தவிதமான ரத்தம் சிந்துதலும் இல்லாமல் நடந்து முடிந்தது; இங்கு கவனிக்கப்பட வேண்டிய முக்கிய அம்சமாகும்.

இந்த பேரணிச் சூட்டோடு ஜனாதிபதித் தேர்தலுக்கு அரசு செல்லலாம். ஆரவார அலைகள் அடங்குவதற்கு முன் அதனைத்தான் செய்வார்கள் என நிச்சயமாக நாம் எதிர்பார்கலாம்.

ஆனால் இவை ஒரு புறமிருக்க எதிர்வரும் தேர்தல்களில் தமிழ்க்கட்சிகள் என்ன நிலைப்பாடு எடுக்கப்போகின்றன என்பது முக்கியமான கேள்வியாகும். தமிழ் கட்சிகள் உறுதியான ஒரு நிலைப்பட்ட முடிவை எடுப்பது அவற்றின் வரலாற்றுக்கடமையாகும்.

தொடரப்பட்ட இனப்பிரச்சினை தீர்வு முயற்சிகள் அதன் இலக்கை எய்தவேண்டும் எல்லாவற்றையும் கவிட்டுக்கொட்டி திரும்பவும் பூச்சியத்திலிருந்து தொடங்குவதானால் அதற்குள் தமிழ் சமூகம் எத்தகைய அனர்த்தங்களை சந்தித்துவிடும் என்பதனை கற்பனை செய்து பார்ப்பதே கடினம்.

சகல வழிகளிலும் தமிழ் மக்களின் அபிலாசைகளை பூர்த்தி செய்யக்கூடிய தீர்வு ஒன்று உருவாகுவதற்கு சகல விதமான முயற்சிகளையும் நாம் எடுத்தாகவேண்டும். ●

### இனியொரு விதிசெய்வோம்!

-சூரியன்-

அதிகாலை பனிக்குளிரை
கிழித் தெழுதும் சூரியனாய்
நிமிர்ந்த வாழ்வு
இன்றோ......
புதைகுழிக்குள் அல்லவா
முகம் புதைத்து கிடக்கிறது!
எங்கள் தேசத்தின் முகத்தில்
சோகம் மட்டுமே சொந்தமானது!
கண்ணீர் சிந்திய விழகளெல்லாம்
ரெத்தம் சிந்தியே
எமது தேசமேனியை நனைக்கும்!
சுதந்திர கீதம் முழங்கிய தெருக்களில்
மௌன கீதமே நிரந்தரமானது!
முடிவேயில்லா எங்கள் பயணத்தில்
முகவரியிழந்த மனிதர்களானோம்!
காடுகளெங்கும் கால்பதித்திருக்கும்
போரின் புத்திரர்கள்
தியாகிகள் தாமெனும்
புதியவிதியை எழுதுகையில்
நாமும்-
விடுதலை நெருப்பில் பூத்துச்சிலிர்த்த
புயலின் புதல்வர்களென
புதிய மரபை
இன்றே..... எழுதுவோம்!

நீலன் திருச்செல்வம் அவர்களின் படுகொலை தொடர்பாக உலகின் முக்கியமான மனிதர்களின் கண்டன அறிக்கைகள், பல பத்தி எழுத்தாளர்களின் கட்டுரைகள் பல வானொலி, தொலைக்காட்சி வர்ணனைகள் இதுவரை இடம்பெற்றுக்கொண்டிருக்கின்றன. பரவலான பல கண்டனங்கள் தொடர்ச்சியாக வந்த கொண்டிருக்கின்றன. ஆனால் இன்னும் சில நாட்களில் இவை அடங்கி எல்லாம் வழமைபோல் ஆகிவிடும்.

நீலன் அவர்கள் உலகளாவிய அளவில் நன்கு அறியப்பட்ட மனிதர் என்பதை அவர் உயிருடன் இருக்கும் போது அவருடன் நெருங்கிப்பழகியவர்களும், சில அறிவு ஜீவிகள் மாத்திரம் தான் அறிந்திருந்தார்கள். அவரின் பரிமாணம் எத்தகையது என்பதை அவரது மரணமே உணர்த்தி நிற்கின்றது. கோபி அன்னனின் கண்டம், ஜெனிவாவில் கூட்டப்பட்ட பலநாடுகளின், மனித உரிமை அமைப்புக்களின் கண்டனம் ஆகியன அவர் உலகளாவிய அளவில் எத்தகைய தொடர்புகளைக் கொண்டிருந்தார் என்பதை உணர்த்தி நிற்கின்றன.

அவர் தமிழரா? முஸ்லீமா? சிங்களவரா? என்ற கேள்விக்கு அவர் உலகத்தின் பிரசையாக இருந்தார் என்று ஒருவர் எழுதியிருந்தார். நீலன் உண்மையில் உலகக் கிராமம், பல்லினங்களின் நாடு, சட்டத்தின் ஆட்சி, மனித உரிமைகள், ஜனநாயகம் ஆகியவற்றில் உறுதியான நம்பிக்கை கொண்டிருந்தார்.

அதிகாரங்கள் மையத்தில் குவிந்திருப்பதை அவர் அடியோடு வெறுத்தார். அதிகாரங்கள் மக்களுக்குப் பகிர்ந்தளிக்கப்படவேண்டும் என்பதில் அறிவார்ந்த, ஆணித்தரமான, நிலைப்பாட்டைக் கொண்டிருந்தார். அந்த அடிப்படையிலேயே எமது நாட்டில் அதிகாரப் பரவலாக்கலுக்கான தீர்வித்திட்ட யோசனைகளை உருவாக்குவதில் தனது பங்பளிப்பை வழங்கியிருந்தார்.

அதனை அமுலுக்கு கொண்டு வருவதில் தான் சார்ந்த கட்சியினூடாகவும், தனது நிறுவன மயப்பட்ட ஆற்றலூடாகவும் அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டர்.

அழிவுக்கும், ஜனநாயக மறுப்புக்கும் உட்பட்டு நடைப்பிணமாகி நிற்கும் சமூகத்திற்கு அதிகாரம் எந்தளவிலேனும் பகிரப்படுவதற்காக உழைப்பவன் எந்த அடிப்படையில் துரோகியாக முடியும்.

கப்படவில்லை என்றே கூறவேண்டும்.

அவர்கள் தமிழ்ப்புத்திஜீவிகளை அழித்தார்கள், சகோதர இயக்கங்களைச் சார்ந்த போராளிகளை படுகொலை செய்தார்கள், தமிழ்த் தலைவர்களை அழித்தார்கள், தமிழ்சமூகத்துடன் ஐக்கியமாக வாழ்ந்த முஸ்லீம் மக்களை உடுத்த துணியுடன் அவர்கள் ஆயிரமாண்டு வாழ்ந்த பூமியிலிருந்து வெளியேற்றினார்கள்.

எல்லைப் பிரதேசங்களில் வாழும் சாதாரண சிங்கள மக்கள் மீது தாக்குதல் தொடுத்தார்கள். 14வயதுக்குட்பட்ட சிறுவர், சிறுமியரை யுத்தமுனைக்கனுப்பி அவர்களை ஆயிரக்கணக்கில் காவுகொடுத்தார்கள்.

இவை மாத்திரமல்ல தமிழ் மக்களின் விடுதலையின் பெயரால் அத்தனை வழங்களையும் சுரண்



மல் போரின் அடையாளங்களை தாங்கி நிற்கும் இந்த சூழல் மாற்றப்படவேண்டும் என்று குரல் எழுப்பியவர். ஆனால் அவர் அதே கொழும்பு நகரில் தற்கொலைக்குண்டுதாரி ஒருவரினால் படுகொலை செய்யப்பட்டுள்ளார். அப்படியானால் இந்தக்காட்டுமிரண்டித்தனத்தை நாம் என்னவென்று அழைப்பது.

அவசரகாலச்சட்டம், பயங்கரவாதத்தடைச்சட்டம் ஆகியவற்றுக்கு எதிராக தமது கட்சியின் சார்பில் பாராளுமன்றத்தில் செயற்பட்டதுமாத்திரமல்ல இந்த இரண்டு சட்டக்களினதும் பாரதூரமான தன்மை பற்றி பல கட்டுரைகளை எழுதியவர். சர்வதேச மன்னிப்புச்சபை, மனிதஉரிமை அமைப்புக்கள் இவை தொடர்பான கண்டனங்களை வெளியிடுவதில் நீலனின் பாத்திரமும் கணிசமானது.

# பொரளையில் 1983 யூலை இனப்படுகொலை ஆரம்பம்

# 1999 யூலை நீலன்படுகொலை ......?

டினார்கள். புனர்நிர்மாணிக்க முடியாத பேரழிலிருந்து அவர்கள் தமிழ் மக்களை பாதுகாக்கவில்லை. ஆனால் அந்த அழிவுகள் அவர்களின் யுத்த வாதத்துக்கு மூலதனமாக்கப்பட்டன. இந்த அழிவுகள் எல்லாம் புலிகளின் ஆதிக்கத்திற்கானதே தவிர தமிழர்களின் சுதந்திரமான வாழ்வுக்கானதல்ல.

**எஸ்.திருநாவுக்கரசு**

யார் துரோகிகள் யார் தியாகிகள் என்பதற்கு சுதந்திரமான அளவுகோல்கள் தேவை. உலகில் ஆதிக்கம் வகித்த சக்திகள் எதனைக் குறிப்பிட்டனவோ அவையே வழக்காக வந்தது என்பது ஒன்றும் புதிதானவிடயமல்ல. பண்டைய கிரேக்கத்தில் அடிமைகள் மக்கள் என்று ஏற்றுக்கொள்ளப்படவில்லை.

வருணாசிரமதர்மம் கடுமையாக கடைப்பிடிக்கப்பட்ட காலத்தில் சூத்திரர்கள் மானிடராக கருதப்படவில்லை. வெள்ளை நிறவேறி தென்னாபிரிக்கா, தென்மேற்கு ஆபிரிக்க, ரொடீசிய ஆட்சிகள் கறுப்பின மக்களை மக்களாக ஏற்றுக்கொள்ளவில்லை.

நீலன் திருச்செல்வம் இந்த நாட்டில் கொடூரமான இனஒடுக்கு-முறைக்கு உட்பட்டுள்ள தமிழ் மக்களுக்கு அதிகாரப் பரவலாக்கலுக்கு ஆதரவாக நின்றார். அதிகாரம் பரவலாக்கப்படவேண்டும் என்பது மக்களின் இன்றைய அபிலாசையுமாகும்.

இது நிகழும் பட்சத்தில் எங்கே தமது குழுவின் ஆதிக்க அபிலாசைகளுக்கு பங்கம் நேருமோ என்ற பயமும்தான் நீலன் மீது குரூரமான தாக்குதல் நடத்தப்படுவதற்கு காரணமாய் அமைந்தது.

உதாரணமாக சரோஜினி யோகேஸ்வரன் அவர்கள் யாழ் மாநகரசபைக்கு மக்களாலே தெரிவு செய்யப்பட்டார். ஆனால் மக்களுக்கான அவரது சேவை தம்மைப் பற்றிய எண்ணங்களை மக்களிடமிருந்து மறக்கடித்துவிடும் என்ற பயம்தான் அந்தப்படுகொலைக்கு காரணம்.

அல்லாமல் தமிழீழ இலட்சியம் என்று சொல்வது சுத்த மோசடியே! தமது கட்டுப்பாட்டில் இருந்த பிரதேசங்களை இழந்து மக்கள் பேரழிவின் விளிம்பில் நம்பிக்கையற்ற சூழ்நிலையில் நிறுத்தப்பட்டிருக்கையில் இந்தக்கோஷம் குழுநலன்களை பாதுகாத்துக்

த்தப்பட்டன.

அதிகாரப் பரவலாக்கல் பற்றிய கருத்துருவளர்த்தெடுக்கப்பட்ட அளவுக்கு அதனை அரசியல் யாப்பில் உறுதிப்படுத்துவதற்கான வேலைகளை மேற்கொள்வதற்கு ஐ.தே.க ஆதரவு அளிக்காது என்ற காரணத்தை மாத்திரம் கூறிவிட்டு சென்றுவிட முடியாது. அது தமிழ் மக்களை மாத்திரமல்ல நாட்டின் சகல மக்களையும் ஏமாற்றிய கதையாகத்தான் முடியும்.



அரசு தீர்வுத்திட்ட யோசனைகளை அமுல்படுத்த முயற்சிக்கப் போகிறது என்ற அரசல் புரசலான கதைகளும் அதிகாரப்பரவலாக்கலுக்கு சர்வதேச அளவில் இருக்கும் ஆதரவும் புலிகளை உறுத்தும் விடயங்களாகும்.

அப்படியானால் புலிகள் என்ன கோருகின்றார்கள் ஏ்ன்பதை தெளிவுபடுத்த வேண்டும். தமது பாசிச படுகொலைகளுக்கும், ஜனநாயக மறுப்புக்கும், யுத்தவாதத்திற்கும் உலகம் ஆதரவு அளிக்கவேண்டும் என்றா இவர்கள் எதிர்பார்கின்றார்கள்? புலிகள் எதை எதிர்பார்கின்றார்கள் என்பதை யாணை பார்த்த குருடர்கள் போல் புலி ஆதரவு சக்திகள் வியக்கியானம் செய்கின்றன.

உண்மையில் இவை புலிகளை வைத்து பிழைப்பு நடத்தும் சக்திகளே! இவற்றினுடைய வாழ்நிலைக்கும் வடகிழக்கில் பாதுகாப்பற்று வாழும் தமிழ் சமூகத்திற்கும் சம்பந்தமில்லை.

திரு. நீலன் அவர்கள் வடகிழக்கு பகுதிகளில் ஆட்கள் காணாமல்போதல், அரசு உணவை ஆயுதமாகப் பாவித்து மக்களை பட்டினி போடும் விடயங்களையிட்டு தமது எதிர்ப்பை தெரிவித்ததோடு இவை பற்றி விரிவான உரைகளை பாராளுமன்றத்தில் ஆற்றியதோடு மாத்திரமல்லாமல் இத்தகைய பிரச்சினைகளில் சர்வதேச கவனத்தை ஈர்ப்பதில் முக்கிய பங்காற்றியவர்.

கொழும்பு நகரில் போடப்பட்டிருக்கும் சோதனைச் சாவடிகளையும் மணல் மூடைகளைக் கொண்ட காப்பரண்கள் பற்றியும் தனது விசனத்தை தெரிவித்தவர். சிவில் சமூகம் வாழும் இடமாக இல்லா

மனித உரிமைகள் பாதுகாப்புக்குழு, மனித உரிமை ஆணைக்குழு போன்றவற்றை உருவாக்குவதிலும் நீலனின் பங்கு குறிப்பிடத் தகுந்தது.

மனித உரிமைகள் சட்டத்தால் உறுதி செய்யப்படவேண்டும் என்று இடையறாது வலியுறுத்தி வந்தவர். இந்த நாட்டில் மனிதஉரிமைகளை பாதுகாப்பதற்கான கொஞ்ச நஞ்ச எத்தனிப்பிலும் நீலனின் பங்கு குறிப்பிடத்தகுந்தது.

ஜனநாயக உள்ளடகத்தைக் கொண்ட மனித உரிமைகளை உறுதி செய்யும் அரசியலமைப்பே நீலனின் அபிலாசையாக இருந்தது.


பத்திரிகைகள் அரசினது அல்லது வேறு ஆதிக்கம் வகிக்கும் சக்திகளது தலையீடு இன்றி சுதந்திரமாக செயற்பட வேண்டும் என்பது அவரின் விரும்பமாக இருந்தது.

பல்லினங்களின் நாடு என்பது அவரின் கனவு. அந்த வகையில் தான் அவர் அம்பாறை மாவட்டத்தின் மீது ஆழ்ந்த ஈடுபாடுகொண்டிருந்தார்.

அவர் உலகத்தால் அறியப்பட்டிருந்த அளவுக்கு அவர் சார்ந்த சமூகத்தால் அறியப்பட்டிருக்கவில்லை. தன்னடக்கமும், எளிமையாக பழகும் பண்பும் அவரிடம் இருந்தன. அவர் பெரிதாக எழுதிக்குவிக்கவில்லை.

ஆனால் எரிகின்ற முக்கியமான பிரச்சினைகள் தொடர்பாக உலகுக்குத் தெரிவிப்பதிலும் இலங்கையின் அரசியலமைப்பில் செய்ய வேண்டிய கட்டமைப்பு மாற்றங்கள் தொடர்பாகவும் அக்கறை செலுத்தி வந்திருக்கிறார். அவர் தமிழர் விடுதலைக்கூட்டணியின்

தொடர்ச்சி 11ம் பக்கம்☞



மன்னிக்க வேண்டும். துரோகி, தியாகி என்ற சொற்கள் எமது சமூகத்தில் யார் ஆதிக்கம் வகிக்கிறர்களோ அவர்கள் யார் யாரை இவ்வாறு அழைக்கிறர்களோ அதுதான் சமூக வழக்கமாகவும் மாறியிருக்கிறது.

உண்மையின் பக்கம் நின்று சிந்தித்தால் இந்த ஆதிக்கம் வகிப்பவர்கள் கடந்த 20வருடங்களில் தமிழ்ச் சமூகத்திற்கிளைத் தளவு துரோகம் வேறுயாராலும் இழைக்

ஈரானிய மத அடிப்படை-வாதம் சுன்னா முஸ்லீம்களை முஸ்லீம்களாக ஏற்றுக்கொள்ளவில்லை.

இவற்றைப்போல் சமூகத்தில் ஆதிக்கம் வகிக்கும் குழுக்கள் தமது குழுவாதத்தை சமூகத்தின் மேல் திணிக்கின்றன. அந்த வகையில் மற்றவர்களை சகிக்காத பாசிசக்குழுக்கள் காட்டுமிரண்டித்தனமான தாக்குதலை மாற்றுக் கருத்துடையோர், மாற்று ஜனநாயக குழுக்கள் மீது நடத்துகின்றன.

கொள்வதற்கான கவசமே.

பொதுஜன முன்ன்ணி அரசின் ஆட்சி காலாவதியாகும் வருடங்களில் பதவிக்கு வரும்போது கொடுத்த வாக்குறுதிகள் பற்றிய கேள்விகள் எழவே செய்யும். அதிகாரப் பரவலாக்கல் பற்றி அரசு பல்வேறு ஊடகங்களின் ஊடாகவும் பிரச்சாரம் மேற்கொண்டிருந்தது.

கிராமங்கள் தோறும் பிரச்சாரக் கூட்டங்கள், சமாதான ஊர்வலங்கள், தெரு நாடகங்கள் நடா

# குர்திஸ் மக்களின் எதிர்காலம்?

குர்திஸ் மக்களின் தலைவர் ஒகலான் அவர்கள் கைது செய்யப்பட்ட பிறகு ஐரோப்பாவிலும் உலகின் பல்வேறு பகுதிகளிலும் குர்திஸ் மக்கள் ஆர்ப்பாட்டங்களை நடத்தினார்கள். ஒகலானை விடுதலை செய்யக்கோரி நடந்த இயக்கமே அண்மைக்காலத்தில் உலகளாவிய அளவில் நடந்த பெரிய இயக்கமென குறிப்பிடலாம்.

ஆனால் துருக்கிய நீதிமன்றம் அவருக்குத் தூக்குத்தண்டனை விதித்தது. தற்போது கிளச்சியை கைவிட்டு பேச்சுவார்த்தைக்கு தயாராகுமாறு ஒகலானிடம் துருக்கிய அரசு அதிகாரிகள் கேட்டுள்ளார்கள். ஒகலானும் தனது சகாக்களுக்கு அறிவித்துள்ளதாகச் கூறப்படுகிறது.

இந்தச் சூழ்நிலையில் குர்திஸ் மக்களின் வரலாற்றையும் பிரச்சினைகளையும் சற்று அவதானிப்போம். துருக்கியின் சனத்தொகை 63மில்லியன்கள். அதில் 10-12 மில்லியன் குர்திஸ் மக்களாவர்.

துருக்கியர்கள், குர்திஸ்கள் கிரேக்கர்கள், அல்பேனியர்கள், பொஸ்னியர்களைக் கொண்ட பல இனமக்களின் நாடாகும்.

முதலாம் உலக மாகாயுத்தத்தை தொடர்ந்து ஓட்டமன் சாம்ராச்சியம் தகர்ந்துபோனது.

1923ல் துருக்கியத் குடியரசு உருவாகியது. பல இனமக்கள் வாழ்வதைக் கருத்திற்கெடுக்காத துருக்கியமயமாக்கல் நடந்தது.

தேசத்தை கட்டியெழுப்புவது என்பது துருக்கியமயமாக்கல் என்பதாகவே இருந்தது. ஏனைய இனத்தவர்கள் துருக்கிய மயமாக நிர்ப்பந்திக்கப்பட்டார்கள்.

சமூகத்தின் பல்லினத்தன்மை நிராகரிக்கப்பட்டு ஒன்றைத்தன்மை திணிக்கப்பட்டது. இங்கு சிங்கள மேலாதிக்கம், சிங்கள மயமாக்கல்போலவே அங்கும் திணிப்புக்கள் நடந்தன. நகரங்களில் இருந்த குர்திஸ்கள் அவ்வாறு கலந்தும் விட்டார்கள். இங்கு மலையாளிகளும், வடமேல் மாகாணத்தில் வாழ்ந்த தமிழர்களும் சிங்களமயமாகினர்.

வடகிழக்கிலும், மலையகத்திலும் திட்டமிட்ட குடியேற்றத்தின் மூலம் அவை மேற்கொள்ளப்பட்டன. தனிச்சிங்களச்சட்டம் கொண்டுவரப்பட்டமை, சிங்களம் உத்தியோகபூர்வ மொழியாக்கப்பட்டதும் அந்த அடிப்படையிலேயே குர்திஸ் மக்களின் பெரும்பாலோனோர் கிராமப்புறங்களிலேயே வாழ்ந்தார்கள் 90வீதமானவர்கள் அவ்வாறுதான்.

ஆனால் அவர்கள் பல்வேறு இனக்குழுக்களாகவும், மதக்குழுக்களாகவும், நில உடமையாளர்களாகவும், சமூக குழுவினராகவும் பிளவுபட்டிருந்தார்கள். அவர்களுக்கிடையே அடிக்கடி மோதல்கள் நடைபெற்றன. காலாச்சார ஒருமைப்பாடு என்பதற்கப்பால் இந்தச்சண்டைகள் நடைபெற்றன.

பலவந்தமான துருக்கியமயமாக்கல் நிகழாதிருந்திருந்தால் அவர்கள் சுயாதீனமான, முழுமைபெற்ற சமூகமாக வளர்ந்திருக்கக்கூடும்.

ஆனால் துருக்கிய மேலாதிக்கம் அவர்களை பின் தங்கிய நிலைக்கு தள்ளியது. புதிய துருக்கிய அரசு அவர்களின் உள்ளூர் அதிகார அமைப்புக்களை அழித்தது. குர்திஸ் மக்களின் இனக்குழுத்தலைவர்கள், மதகுருமார், நில உடமையாளர்கள் சமூகத்திற்கு தலைமை தாங்கினர். துருக்கிய மேலாதிக்க வாதம் அவர்கள் மேல் திணிக்கப்பட்ட போது அவர்கள் விசனமுற்றார்கள்.

1925-1927 காலப்பகுதியில் துருக்கியின் தென்கிழக்குப்பகுதிகள் யுத்தப்பிரதேசமாகின.

எமது வடகிழக்கைப் போல. இந்தத் தென்கிழக்குப் பகுதி புறக்கணிக்கப்பட்ட அபிவிருத்தி செய்யப்படாத இடமாக மாறியது.

தண்டனையில் இடமாற்றம் பெற்றுச் செல்லும் அதிகாரிகள், ஊழியர்களே இங்கு பணிபுரிந்தார்கள். அரசின் முதலீடுகள் எதுவும் இப்பிரதேசங்களில் மேற்கொள்ளப்படவில்லை. எமது பிரதேசங்களிலும் இவ்வாறுதான் நடந்தது.

கல்வி, தொழில் ஆகியவற்றில் பாரபட்சம் காட்டப்பட்டதோடு திட்டமிட்ட குடியேற்றங்கள் மேற்கொள்ளப்பட்டன. பொருளாதாரம் கலாச்சாரம், கல்வி திட்டமிட்டு நசுக்கப்பட்டன. இதேவேளை நாட்டின் ஏனைய பகுதிகளில் வசதிகள் பெருகின. இதனால் வடகிழக்கின் வளர்ச்சி நாட்டின் ஏனைய பகுதிகளுடன் சம்பந்தப்படாததாகியது. மக்கள் அதிருப்தியடைந்தார்கள். துருக்கியிலும் இதுதான் நடந்தது.

1970கள் வரை உறுதியான குர்திஸ் இயக்கம் உருவாகவில்லை. கொஞ்ச அரசியல் உணர்வு பெற்றவர்கள் இடதுசாரி இயக்கத்தில் இணைந்தார்கள்.

1971, 1980இல் நடைபெற்ற இரண்டு இராணுவ சதிப்புரட்சியின் போதும் இடதுசாரி இயக்கங்கள் நசுக்கப்பட்டன. குர்திஸ் மக்கள் இடதுசாரி இயக்கத்துடன் தம்மை இனங்காட்டவில்லை நகரம் சார்ந்த படித்த புத்திஜீவிகள் நாட்டைவிட்டு வெளியேற குர்திஸ் இயக்கம் பின்தங்கிய கிராமப்புற இளைஞர்களால் முன்னெடுக்கப்பட்டது.

குர்திஸ் மக்கள் மத்தியில் குழுக்கள் குழுக்களாக தமக்குள் சண்டையிடும் சமூகச்கலாச்சாரம் நிலவியது. அவர்கள் தாமாக மாத்திரம் சண்டையிடவில்லை. அரசினாலும் தூண்டப்பட்டனர்.

இங்கு அது பிரதேச வாதங்களாகவும், குறிச்சிவாதங்களாகவும், சாதிப்பிரச்சினைகளாகவும் காணப்பட்டன.

குர்திஸ் மக்களின் நம்பிக்கையீனங்களும், அதிருப்திகளும் அதிகரித்து செல்லச் செல்ல அது ஆயுதப்போராட்டத்திற்கு இட்டுச் சென்றது.

1980இன் பின் குர்திஸ் மொழி தடைசெய்யப்பட்டது. பிரதேசங்களுக்கான குர்திஸ் பெயர்கள் மாற்றப்பட்டன. தங்களுடைய பிள்ளைகளுக்கு துருக்கிய பெயர்களை வைக்க நிர்ப்பந்திக்கப்பட்டார்கள்.

குர்திஸ் மக்களின் மனதில் ஆறாதரணமாக அது குடிகொண்டிருக்கிறது. குர்திஸ் மொழியில் படிப்பது, ஒலி, ஒளிபரப்புவது தடைசெய்யப்பட்டது அவர்களை ஆத்திரமடையச்செய்தது.

இந்தச் சூழலில்தான் குர்திஸ் தொழிலாளர்கட்சி (பி.கே.கே) உதயமாகியது. மார்க்சிய-லெனினிய சிந்தாந்தத்தில் ஈடுபாடு கொண்ட அங்காரப்பல்கலைக் கழகத்தில் விரிவுரையாளராக கடமையாற்றிய அப்துல்லா ஒகலான் இந்த இயக்கத்திற்கு தலைமை தாங்கினார். இந்த இயக்கம் துருக்கியில் உருவாகினாலும் சிரியா பயிற்சியும் ஆயுதமும் வழங்கியது.

பி.கே.கே கெரிலாக்கள் உருவாகுவதற்கு காரணம் குர்திஸ்களின் ஜனநாயக அரசியல் நடவடிக்கைகள் தடைசெய்யப்பட்டதே. அதற்கான சகல கதவுகளும் அடைக்கப்பட்டன.

குர்திஸ் ஜனநாயக அரசியல் சூழல் பாலைவனமாகியதால் அது பி.கே.கேயின் வளர்ச்சிக்குப் பசுந்தரையாகியது. மலைமுகடுகளில் நடக்கும் போராட்டங்களில் குர்திஸ்கள் எத்தகைய தியாகத்திற்கும் தயாரானார்கள்.

அவர்கள் ஒரு பாரிய மரபு ரீதியான இராணுவத்தை முகம் கொடுக்க வேண்டியிருந்தது. கெரிலா யுத்தமுறைக்கு பயிற்றப்படாத இராணுவத்திற்கு அவர்கள் கடுமையான பாதிப்பை ஏற்படுத்த முடிந்தது.

1980களில் பி.கே.கே ஒரு முக்கியமான சக்தியாக வளர்ச்சி பெற்றிருந்தது. அது தாக்கிவிட்டு ஓடும் தந்திரமுறையில் தாக்குதல் நடத்திவிட்டு மலைப்பிரதேசங்களில் மறைந்துகொண்டது.

1990களில் தான் துருக்கி இராணுவ கொமாண்டோக்கள், விஷேச பொலீஸ் படை ஆகியவற்றை உருவாக்கி அதனை ஆயுதமயமாக்கி விமான வசதிகளையும் ஏற்படுத்திக்கொண்டு குர்திஸ் கெரிலாக்களுக்கெதிரான பயங்கரமான தாக்குதல்களை மேற்கொண்டது.

இதன் மூலம் துருக்கியின் ஆயுதப்படையினர் முதலில் நகரங்களிலும் பின்னர் கிராமங்களிலும் தமது இராணுவ ரீதியான மேலாதிக்கத்தை நிலைநாட்டினர். இதனைத் தொடர்ந்து பி.கே.கே தனது தளங்களை விரிவுபடுத்துவதற்கும் பேரம்பேசும் ஆற்றலை அதிகப்படுத்திக்கொள்வதற்கும்

**சத்தியன்**



வடஈராக்கை மையமாகக்கொண்டு செயற்பட்டது.

அமெரிக்காவின் ஒப்புதலுடன் வடஈராக்கில் விமானம் பறக்க அனுமதிக்காத பகுதிகள் மீது துருக்கி தாக்குதல் நடத்த அனுமதிக்கப்பட்டது.

பி.கே.கே ஐ தன்னுடைய பகுதிகளிலிருந்து துரத்தி-விடமுனையும் இன்னுமொரு குழுவான குர்திஸ் ஜனநாயக்கட்சிக்கு ஒத்துழைப்பும் ஆதரவும் வழங்கியது.

ஆனால் சிரியாவில் இருந்த பின்தள வாய்ப்பும், சிரியாவின் தொடர் ஆதரவும் பி.கே.கே ஐ அழித்துவிட முடியாது என்ற நிலையை உருவாக்கியிருந்தது.

டமஸ்கஸ்ஸைப் பொறுத்தவரை சிரியாவுக்கும், ஈராக்கிற்கும் மிக முக்கியத்துவம் வாய்ந்த யூபிரதீஸ்-தைகிறீஸ் நதிகளின் நீர்ப்பகிர்வு விவகாரத்தில் துருக்கியை ஒரு உறுதியான நிலைப்பாட்டுக்கு கொண்டுவருவதற்கான அழுத்தத்தை கொடுப்பதற்கான கருவியாகவே பி.கே.கே பயன்படுத்தப்பட்டது.

1998 இல் துருக்கிய இராணுவத்தினர் ஹபிஸ்-அல்-அசாத்தின் சிரிய நிருவாகத்தின் மீது பொறுமை இழந்து சிரியா ஒகலானை வெளியேற்றாவிட்டால் சிரியா மீது தாக்குதல் நடத்தப்போவதாக பயமுறுத்தினர். துருக்கியும் இஸ்ரேலும் அண்மைக்காலத்தில் மூலோபாய ரீதியான இராணுவ உடன்பாட்டை ஏற்படுத்திக்கொண்டதன் பின்னர் அசாத்திற்கு மாற்று வழிகள் குறைந்தன.

1998 இலையுதிர் காலத்தில் சர்வதேச நாடோடியாகிய ஒகலான் 1999 துருக்கிய சிறைக்கு கொண்டு வரப்பட்டார். இத்தாலி, ஜெர்மனி ஆகியன தவிர ஐரோப்பிய நாடுகள் கதவுகளை மூடிக்கொண்டன. ஐரோப்பிய நாடுகளில் அவர் மீது வழக்குத் தொடரக்கூடிய நிலை இருக்கவில்லை.

கிரேக்கம் எதிரியின் எதிரி நண்பன் என்ற நிலைப்பாட்டை எடுத்தது.

மொத்தத்தில் ஒகலான் வஞ்சகம், நம்பிக்கைத் துரோகத்தின் பொறிக்குள் அகப்பட்டார்.

பி.கே.கே கிளை முறிக்கப்பட்டிருக்கலாம். தலையில்லாமல் ஆக்கப்பட்டிருக்கலாம். ஆனால் சமூக அரசியல் விலக்கல்கள், பொருளாதார ரீதியான ஒதுக்கல்கள், கலாச்சாரரீதியான ஒடுக்குதல்கள் இவற்றுக்கு உள்ளான குர்திஸ் மக்களின் துன்பங்களுக்கு பதில் என்ன? குர்திஸ் மக்கள் தாங்கள் பழிவாங்கப்பட்டிருப்பதாக எண்ணுகிறார்கள்.

துருக்கிய அதிகாரிகள் கூறுகிறார்கள் குர்திஸ் பிரச்சினை என்று ஒன்று இல்லை பயங்கரவாதப்பிரச்சினையே இருப்பதாக. இங்கும் முன்னாள் ஜனாதிபதி டி.பி. விஜயதுங்காவும், இன்று இங்குள்ள குழுக்களான சிங்கள வீரவிதான, பயங்கரவாத எதிர்ப்பு முன்னணி என்பனவும் அவ்வாறுதான் கூறுகின்றன. இந்த நிலை குர்திஸ் மக்களுக்கு துருக்கிய பிரச்சினை என்ற ஒன்றே உண்டு என்ற பிழையான நிலைப்பாட்டுக்கு இட்டுச்செல்கின்றது.

வேறு எவரையும் விட குர்திஸ் மக்களின் பிரச்சினைகளை பேசுவதற்கு பி.கே.கேயிற்கே உரிமை உண்டு. துருக்கிய நிர்வாகம் அதில் தவறு இழைக்குமானால் மீண்டும் அதிகவிலை செலுத்த வேண்டிவரலாம் பி.கே.கேயையும் புலிகளுடன் யாரும் போட்டு குழப்பிக் கொள்ள முடியாது. அது ஒடுக்கப்பட்ட குர்திஸ் மக்களின் உண்மையான விடுதலை இயக்கம் மக்கள் சார்ந்த இயக்கம்.

குர்திஸ்தான் பல நாடுகளை எல்லைகளாகக் கொண்டிருப்பதால் சர்வதேச தலையீடு என்பது தயக்கம் நிறைந்ததாகவே காணப்படுகிறது. துருக்கி, ஈரான், ஈராக், சிரியா, ரஷ்யா ஆகிய நாடுகள் எல்லைகளாக இருப்பதால் இப்பிரச்சினையில் தலையிடுவதால் பலநாடுகளை பகைக்கவேண்டி வரும் என்ற தயக்கம் பல்வேறு நாடுகளுக்கும் இருக்கிறது.

1990களில் முன்னர் முன்னாள் சோவியத்யூனியன் ஆதரவு அளித்திராவிட்டால் குர்திஸ் மக்கள் மோசமாக அழிக்கப்பட்டிருப்பார்கள் என்ற கருத்தும் உண்டு.

எமக்கும் இந்தியாவின் தார்மீக ஆதரவு இல்லாதிருந்திருக்குமானால் என்ன நேர்ந்திருக்கும் என்பதனை சிந்தித்துப்பார்க்க வேண்டும்.

எம்மைப்போன்ற பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்கும் மக்கள் என்ற வகையில் குர்திஸ் மக்களின் பிரச்சினையிலும் பி.கே.கேயின் தலைவர் ஒகலானின் விடுதலையிலும் நாம் தீவிர அக்கறை செலுத்தியாகவேண்டும். ●



## வீரபுரத்தி..........

07 பக்கம் தொடர்ச்சி

வது தாக்குதல் இராணுவம், பொலிஸ் மீது நிகழுமேயானால் அரசியல் கட்சிகளை, பொதுமக்களை தாக்குவது வழமையாகி விட்டது.

இராணுவம் பொலிசின் மீது தாக்குதல் நடத்தும் புலிகளும் இதனைத்தான் எதிர்பார்க்கிறார்கள். ஆனால் அரசோ பொலிசிலும், இராணுவத்திலும் உள்ள இத்தகைய அத்துமீறல்களைப் பற்றிக் கவலைப்படுவதாக இல்லை. இத்தகைய கண்மூடித்தனமான நடவடிக்கைகள் இன்றைய போதுமான நிலமைகளுக்குக் காரணமாகும். இவற்றைத்தடுத்து நிறுத்துவதைப் பற்றிச் சிந்திக்காமல் வேறு பிரச்சினைகளைப் பற்றிப் பேசுவதால் ஒருவித அர்த்தமுமில்லை. ●

## அராஜக.........

12 பக்கம் தொடர்ச்சி

றாலும் சட்டபூர்வ வழிகளை விட்டு விட்டு தறிகெட்ட தனமான நடவடிக்கைகளில் ஈடுபட்டிருப்பதை வன்மையாகக் கண்டிக்கிறோம்.

இந்த மாதிரியான அராஜக நடவடிக்கைகளை அரசு கட்டுப்படுத்த முன்வரவேண்டும். இச்சம்பவங்களில் சம்பந்தப்பட்ட படையினரை கைது செய்து விசாரணை நடத்தவேண்டும்.

படுகொலை செய்யப்பட்ட சிறுமியின் குடும்பத்தாருக்கும், காயப்பட்டவர்களுக்கும் உரிய நஷ்ட ஈடு வழங்கப்படவேண்டும். சேதமாக்கப்பட்ட சொத்துக்களுக்கு நஷ்ட ஈடு வழங்கப்படவேண்டும். ●

# மாங்குளப் பாதை திறப்பு புலிகளுக்கு ஒரு இராணுவதந்திரோபாய நெருக்கடி?

## புலிகள் எதிர் இராணுவம்

என்.ஆர்.சோழ

ஆறுவாரங்கள் இழுபறியிலிருந்த வன்னிக்கான தரைவழிப்பாதை ஒரு முடிவுக்கு வந்திருக்கிறது. புலிகளும்-இராணுவமும் ஒரு உடன்பாட்டுக்கு வந்தது-வன்னியில் வாழும் மக்களுக்கு ஒரு ஆறுதலான செய்தி.

சர்வதேச செஞ்சிலுவை சங்கத்தின் மேற்பார்வையில் இந்த உடன்பாடு ஏற்பட்டிருந்தாலும் இது ஒரு குறிப்பிடத்தக்க முன்னேற்றமாகும்.

புலிகளும்-இராணுவமும் புதைக்கப்பட்டிருக்கும் கண்ணிவெடிகளை இந்தப் பாதை திறப்புக்காக அகற்றினாலும்-அந்த உடன்பாட்டுக்குள் புதையுண்டிருக்கும் இராணுவ ரகசியங்களை இருபகுதியினரும் அறிவார்கள்.

வன்னிக்கான கட்டளை அதிகாரி மேஜர் ஜெனரல் பலகல்ல அவர்கள் ஐந்து தரைவழிப் பாதைகயை புலிகள் முன்வைத்து ஏதாவது ஒரு பாதையை தெரிவு செய்யும்படி கேட்டிருந்தது நெற்றி அடியாகும். இது ஒரு வெற்றிகரமான படைநகர்வுக்குச் சமமாகும்.

வவுனியா-மாங்குளம் பாதை திறப்பதில் இழுபறி நிலை இருந்த போது இந்த அறிவிப்பு வந்திருக்கிறது. புலிகளுக்கும் ஒரு முடிவெடுக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டு விட்டுதென்றே சொல்லலாம். இரு பகுதியினரும் சில விட்டுக்கொடுப்புகளுக்கு மத்தியில் ஒரு உடன்பாட்டுக்கு வந்துள்ளனர்.

ஏ9 வவுனியா-மாங்குளம் பாதையை புலிகள் தேர்ந்தெடுந்திருப்பதை அவதானிக்கும் போது முன்யோசனை இல்லாத அவசர முடிவென்றும் சொல்லமுடியாது. ஏனென்றால் புலிகள் தங்களது இராணுவ நலன்களில் உசாராகவே இருப்பார்கள்.

ஆனால் முறுகல் நிலையைத் தொடந்து-சிறு சிறு தாக்குதல்கள் மூலம் உயிரிழப்புகள் ஏற்பட்டுக்கொண்டிருந்தன.

இருப்பினும் இந்த இறுக்கமான நிலைமை இன்று தளர்த்தப்பட்டிருக்கிறது. ஜெனரல் பலகல்ல அவர்களின் முயற்சியும்-ஐ.சி.ஆர்.சியின் நடுநிலையான அணுகுமுறையும்-புலிகளின் விட்டுக்கொடுப்பும் அடைபட்டிருந்த வன்னிப் பாதை திறப்பதற்கு வழி ஏற்படுத்திக்கொடுத்திருக்கிறது.

உணவுப் பற்றாக்குறையால் பட்டினிச்சாவை எதிர்நோக்கியிருந்த வன்னிமக்களுக்கு பாதை திறந்த நாள் மகிழ்ச்சியான நாளாகவே இருந்திருக்கும் என அவதானிகள் கூறுகின்றனர்.

இந்த பாதை திறப்பு ஒரு தற்காலிகமான ஏற்பாடுதான். நீண்ட காலம் இது தாக்குப் பிடிக்காது என்ற பரவலான அபிப்பிராயமும் இருந்து வருகின்றது.

பலத்த இழுபறிக்குப் பின் உடன்பாடு வந்தாலும் தத்தமது தேவைகள் கருதி கொஞ்சக் காலம் இந்தப் பாதையில் சமாதானம் நிலவும் என்றே நம்பப்படுகின்றது.

ஏனென்றால் சர்வதேச தொண்டு நிறுவனங்களான ஐ.சி.ஆர்.சி., யு.என்.எச்.சி.ஆர் அதிகாரிகளும் இந்த உடன்பாடு உருவாகுவதில் பங்களிப்பு செய்திருக்கிறார்கள். இது புலிகளுக்கும்-இராணுவத்திற்கும் இடையில் இப்பகுதியில் ஏற்பட்ட அறிவிக்கப்படாத ஒரு யுத்த

துணுக்காய்-புதுக்குடியிருப்புக்கு அண்மையில் இருப்பதால், அங்கு பாதுகாப்பற்ற நிலையை தடுக்க உதவுகின்றது.

★ மன்னார்-சங்குப்பிட்டி பாதையை திறக்கும் முடிவில் இராணுவம் இருப்பதால்-அதை தடுத்து நிறுத்துவதற்கும்-தமது ஆள் பலத்தை அதிகரிப்பதற்கும் இந்த உடன்பாடு தேவையாகின்றது. இப்பகுதியில் இருந்து விலக்கிக் கொள்ளப்படும் புலிகள் மேற்குப் கரைப்பாதையில் (சங்குப்பிட்டி) இராணுவத்தின் முன்னேற்றத்தை தடுத்து நிறுத்துவதற்கு-நிறுத்தப் படலாம்.

### இராணுவத்திற்கு கிடைக்கும் நன்மைகள்

★ இந்தப் பாதை திறப்பால் அரசுக்கும்-வன்னி கட்டளை அதிகாரி ஜெனரல் பலகல்ல அவர்களுக்கும் நல்ல பெயர்கிடைத்திருக்கிறது. ஒரு சிங்கள இராணுவ அதிகாரி புலிகளின் பலவீனத்தை வெளிக்காட்டியிருக்கிறார். வன்னி மக்களின் நலன்களை விட தங்கள் நலன்களே முதன்மையாது என்பதை.

★ சர்வதேச நாடுகளும்-பிரச்சார ஊடகங்களும் இந்த நடவடிக்கையை பாராட்டியிருக்கின்றன. இந்த பாராட்டுகள் புலிகளை விட இராணுவத்திற்கே போய்ச் சேர்ந்திருக்கின்றன.

★ ஆயிரக்கணக்கான இராணுவ வீரர்களின் உயிரிழப்பால் மீண்டும் கைப்பற்றப்பட்ட முப்பது மைல்



ஆகவே, இந்த பாதை திறப்பில் புலிகள் ஒரு இராணுவ மதிப்பீட்டை வைத்திருப்பார்கள் என்றே நம்பலாம்.

ஒரு வருடங்களுக்கு மேலாக நடந்த யாழ்-கண்டிவீதியை கைப்பற்றுவதற்கான ஜெயசிக்குறு இராணுவ நடவடிக்கையை யாரும் மறந்திருக்க முடியாது. இந்தப் பாதை மீட்பு யுத்தத்தில் மாங்குளம் வரையே இராணுவத்தினர் வர முடிந்தது.

அதற்குமேல் இராணுவத்தால் நகரமுடியாத நிலையே இருந்தன. உயிர் இழப்புகள் இருபக்கமும் அதிகமாக இருந்ததால் ஜெயசிக்குறு நடவடிக்கை நிறுத்தப்பட்டது. இராணுவத்தினர் சண்டையை நிறுத்தினாலும் புலிகளும் எதிர்த்தாக்குதலை தொடராது நிறுத்திக்கொண்டார்கள். காரணம் இருபகுதியினரும் சண்டையிட்டு களைத்திருந்ததுதான்.

நிறுத்தம் என்றும் சொல்லாம்.

### பாதை திறப்பால் புலிகளுக்கு கிடைக்கும் நன்மைகள்

★ மாங்குளத்தில் நிலைகொண்டிருக்கும் இராணுவம் மேலும் இப்பாதையை (மாங்குளம்-கிளிநொச்சி) கைப்பற்றும் முயற்சியிலான பெரும் படைநகர்வை இந்த உடன்பாடு தடுக்கிறது.

★ மாங்குளம்-கிளிநொச்சி வீதியை பாதுகாப்பதற்கு பெருமளவில் குவிக்கப்பட்டிருக்கும் தமது புலிப் படை அணிகளில் பலவற்றை விலக்கிக் கொள்ள ஏதுவாகின்றது.

★ விலக்கிக் கொள்ளப்பட்ட புலிகளை வட-கிழக்கின் வேறு பகுதிகளுக்கு அனுப்பி-இராணுவத்திற்கு எதிராக தாக்குதல்களை தொடுக்க வழிவகுத்துக்கொடுக்கின்றது.

★ இராணுவத்தின் ஆட்டிலறி தாக்குதல் இலக்கு-புலிகளின் முக்கிய இடங்களான மல்லாவி-

நீளமான வவுனியா-மாங்குளம் பாதை இன்று சட்ட ரீதியான போக்குவரத்து பாதையாக மாறியுள்ளது. ஐ.சி.ஆர்.சி போன்ற சர்வதேச பார்வையாளர்கள் இப்பாதை திறப்பில் முக்கியபங்கு வகித்திருப்பதை குறிப்பிட்டுச் சொல்லலாம்.

★ வவுனியா-மாங்குளம் வீதியில் இருந்து இராணுவம் வெளியேற வேண்டும் என்று எந்தச் சந்தர்ப்பத்திலும் கேட்கும் தார்மீக உரிமையை புலிகள் இழந்திருக்கிறார்கள்.

★ யாழிலிருந்து-பரந்தன் வரை, வவுனியாவில் இருந்து-மாங்குளம் வரையும் உள்ள 75மைல் தூர யாழ்-கண்டி வீதி இராணுவக் கட்டுப்பாட்டில் உள்ளது. மிகுதியான 15மைல் தூர மாங்குளம்-கிளிநொச்சி வீதி புலிகளின் கட்டுப்பாட்டில் இருக்கிறது. இந்த வித்தியாசம் ஒப்பீட்டளவில் புலிகளை விட இராணுவம் பலமாக இருப்பது தெளிவாகிறது. இரண்டு பக்கமிருந்தும் 7+7 மைல் வந்தால்-இந்தப்பாதை முழுவதையும் இராணுவத்தால் கைப்பற்றிவிட முடியும். இதைப் புலிகளும் அறிவார்கள்.

★ சமாதானத்திற்கான பேச்சு வார்த்தை-ஏற்றுக்கொள்ளப்பட்ட உடன்பாடுகளை மீறுவதில் புலிகள் கெட்டிக்காரர்கள். இந்த பாதை திறப்புக்கான உடன் பாட்டை மீறினால் ஆபத்தும்-அழிவுகளும் புலிகளுக்குத்தான். பந்தை இராணுவம் புலிகளின் கோட்டுக்குள் அடித்திருக்கிறது. பவுள் இல்லாமல் விளையாட வேண்டியது புலிகள்தான்.



இவற்றிற்கப்பால்-வடகிழக்கில் புலிகளின் இராணுவ நடவடிக்கைகள் புதியவடிவம் பெற்றிருக்கிறது. கெரில்லாத் தாக்குதல் மூலம் இராணுவத்தினருக்கு அழிவை ஏற்படுத்த ஆரம்பித்திருக்கிறார்கள். இந்த தாக்குதலில் நீண்டகால அனுபவமும்-புதிய தொழில் நுட்பப் பயிற்சியும் பெற்றிருக்கும் புலிகள் கண்ணிவெடிகளை இராணுவத்தினர் எதிர்பார்கமுடியாத இடத்தில் வைத்து வெடிக்க வைக்கிறார்கள்.

சமீபத்தில் வவுனியா-மட்டக்களப்பு நகரங்களில் அடுத்தடுத்து நடந்த வாகன அணி தொடர் கண்ணிவெடித் தாக்குதலை குறிப்பிட்டுச் சொல்லலாம். வவுனியாவில் 14அதிரடிப்படை பொலிசாரும்-மட்டக்களப்பில் 11பொலிசாரும் கொல்லப்பட்டிருக்கிறார்கள். 25 பொலீசார் காயப்பட்டுமிருக்கிறார்கள்.

அத்துடன், தற்கொலையாளிகளும்-பிஸ்டல் குழுவினரும் இராணுவ கட்டுப்பாட்டு பகுதிகளுக்குள் ஊடுருவியிருக்கிறார்கள்.

### தமிழர் மத்தியில் ஒரு தலைமைத்துவப் பாலைவனம்

அரசியல் தலைவர்களையும்-தமிழ்க் குழுத்தலைவர்களையும் குறிவைத்து அழிக்கத்தொடங்கி இருக்கிறார்கள். தமிழ்-சிங்கள முன்னணி அரசியல் தலைவர்களை கொல்வதன் மூலம் ஒட்டுமொத்த இலங்கை அரசியலில் ஒரு வெற்றிடத்தை ஏற்படுத்தவே புலிகள் நினைக்கிறார்கள் போல் தெரிகிறது.

அதற்கு முதல்படியாக தமிழர் விடுதலைக்கூட்டணித் தலைவர்களை குறிவைத்திருக்கிறார்கள். நீலன்திருச்செல்வத்தின் படுகொலை கூட்டணியினர் விடயத்தில் புலிகள் கடும் போக்கையே கொண்டிருப்பது தெளிவாகிறது.

மாற்று அரசியல் இயக்கதினரும் தமிழர் விடுதலை கூட்டணியும் தங்கள் அரசியலுக்கு சவாலாக இருப்பார்கள் என்பதை புலிகள் அறிந்திருப்பதே அதற்கு காரணம்.


வட-கிழக்கு அரசியலில் புலிகளுக்கு மாற்றீடாக தமிழர் விடுதலைக்கூட்டணியினரும் மற்ற தமிழ் அரசயில் தலைவர்களும்-சர்வதேச ரீதியில் வெளிநாட்டுத் தலைவர்களிடம் ஒரு மாற்றுக்கருத்தை சொல்லக்கூடியவர்களாகவும் இருக்கிறார்கள். இது புலிகளுக்கு இடைஞ்சலாக இருப்பதுதான் இந்த படுகொலைகளின் தொடர்ச்சிக்கு காரணமாகும்.

புலிகள் ஒரு முடிவை எடுத்து விட்டார்கள். எல்லாத் தமிழ்க்கட்சித் தலைவர்களையும் போட்டுத் தள்ளுவதென்று. அதில் கூட்டணியினர் முதன்மைப்படுத்தப்படுகிறார்கள் என்பதுதான் உண்மை. இப்படி ஒருவர் பின் ஒருவராக சாகப்போகிறார்களா? அல்லது எல்லாக் கட்சித்தலைவர்களும் ஐக்கியப்பட்டு புலிகளின் அராஜகத்தை எதிர்த்து நிற்கப் போகிறார்களா? ஐக்கியப்பட்டால் தப்பிக்க வாய்ப்பிருக்கிறது. புலிகளின் கொலைப்பட்டியல் நீளாமலும் தடுக்க முடியும். ■

### புலிகளால் கொல்லப்பட்ட தலைவர்கள்

- ★ அமிர்தலிங்கம் – ரி.யு.எல்.எப் தலைவர்
- ★ யோகேஸ்வரன் – ரி.யு.எல்.எவ் தலைவர்
- ★ பத்மநாபா – ஈ.பி.ஆர்.எல்.எவ் தலைவர்
- ★ சாம்தம்பிமுத்து – ஈ.பி.ஆர்.எல்.எவ் (எம்.பி)
- ★ யோகசங்கரி – ஈ.பி.ஆர்.எல்.எவ் (எம்.பி)
- ★ சிறீசபாரட்ணம் – ரெலோ தலைவர்
- ★ பிரேமதாசா – முன்னாள் ஜனாதிபதி
- ★ ராஜீவ் காந்தி – முன்னாள் இந்திய பிரதமர்
- ★ ரஞ்சன் விஜரட்ணா – பாதுகாப்பு மந்திரி
- ★ காமினி திசநாயக்கா – யு.என்.பி
- ★ லலித் அத்துலத்முதலி – யு.என்.பி
- ★ நீலன் திருச்செல்வம் – கூட்டணி (எம்.பி)
- ★ சண்முகநாதன் – புளொட் (எம்.பி)

# தியாகமே வாழ்க்கையான விடுதலைப் போராளி



## இலை மறைகாய்

மகா இலுப்பள்ளமையில் இருந்த விவசாயப்பல்கலைக்கழகத்தில் பொருளாதார விவசாயத்தில் ஒரு விரிவுரையாளர். வெறும் இயந்திரீக விவுரையாளராக இருக்க வில்லை. தனது கல்வி சமூகத்திற்கு பயன் படவேண்டும் என்ற அக்கறை இருந்தது. தனது மாணவர்களுடன் ஓயாமல் இது பற்றிய விவாதத்தில் ஈடுபடுவார். ஓய்வு நேரங்களில் அவர்களுக்கு கரத்தே பயிற்சியும் வழங்கினார். அவருக்கும் அவருடைய மாண்வரான சேகருக்குமிடையே ஒரு அத்தியந்த நட்பு உருவாகியது.

சேகர் ஏற்கனவே ஒரு விடுதலை இயக்கத்துடன் தன்னை இணைத்துக்கொண்டு சமூக விழிப்புணர்ச்சியை ஏற்படுத்துவதில் ஈடுபட்டிருந்தவர். ஈழவிடுதலைப்போராட்டத்தில் அந்த இயக்கம் பத்தோடு பதினொன்றாக இருக்க வில்லை. அது வடகிழக்கில் தமிழர், முஸ்லீம்கள், மலையக மக்கள், சாதாரண சிங்கள மக்கள் எல்லோருடைய ஐக்கியத்துடனான விடுதலையை முன்னிறுத்தியது.

வடகிழக்கிலும், மலையகத்திலும் வாழும் சமூக பொருளாதாரரீதியாக ஒடுக்கப்பட்ட மக்களும், பெண்களும் அணிதிரட்டப்பட வேண்டியதன் அவசியத்தை இந்த இயக்கம் வலியுறுத்தி நின்றது.

சேகர் இந்த இயக்கத்தை தனது விரிவிரையாளரான முகுந்தனுக்கு அறிமுகம் செய்தார். பின்னர் யாழ்ப்பாணத்தில் உள்ள பல்வேறு தோழர்களிடமும் முகுந்தனை அழைத்துச்சென்றார்.

இந்த போராட்டத்திற்கு மக்களை அணிதிரட்டுவது எவ்வாறு? சர்வதேச ஆதரவைப்பெறுவது எவ்வாறு? அரசியல் வழிகாட்டல் அடிப்படையில் ஆயுதம் ஏந்திய புரட்சிகர இயக்கம் எவ்வாறு உருவாகும் என்பதுபற்றிய வினாக்கள் எல்லாம் அவரால் தொடுக்கப்பட்டன.

நீரைக் கூடுதலாக விரயம் செய்யாமல் விவசாயம் செய்வது பற்றியும், வடகிழக்கின் சுயதேவையைப் பூர்த்தி செய்வது பற்றியும் முகுந்தன் அதிக அக்கறை கொண்டிருந்தார்.

விடுமுறைகாலத்தில் வட்டுக்கோட்டையிலிருந்து மானிப்பாய்க்கு நிறையவே வினாக்களுடன் சைக்கிளில் வரும் மனிதர் முகுந்தன். தான் வாங்கும் ஒரு பொருளின் தாரதரம் பற்றி கூர்மையான அக்கறை செலுத்தும் மனிதரைப் போல தான் சேரவிருக்கும் அரசியல் இயக்கம் தொடர்பாக மிகமிக கூர்மையான அக்கறை செலுத்தினார்.

எனெனில் அங்கு வாழ்க்கை அர்ப்பணிக்கப்படவேண்டியிருந்தது.

அவர் இந்த அரசியல் இராணுவ ஸ்தாபனத்தில் இணைவதற்கு முன் நூற்றுக்கணக்கான கேள்விகளை எழுப்பினார்.

அதுமாத்திரமல்ல தனது சொந்தக்கிராமத்திலும் அயற்கிராமங்களிலும் உள்ள இளைஞர்களை ஒன்று சேர்த்து கருத்தரங்குகளை ஒழுங்கு செய்தார். பல படித்த இளைஞர்கள் இந்த கருத்தரங்குகளில் கலந்து கொண்டனர்.

இராணுவ கெடுபிடிகள் அதிகமாக இருந்ததால் கருத்துக்களை விட பாதுகாப்பு என்ற விடயமே முக்கியமான கேள்வியாக எழுப்பப்பட்டது. அது 1983 இனப்படுகொலைக்குப்பிந்திய·கெடுபிடிகள் நிறைந்த காலம். எனவேதான் பாதுகாப்பு என்பது முதன்மை பெற்ற விடயமாக இருந்தது. பல இளைஞர்கள் தனது சுற்றாடலில் தேசிய விடுதலைப்போராட்டத்தில் இணைவதற்கு ஒரு உந்து சக்தியாக முகுந்தன் அவர்கள் செயற்பட்டார்.

தனது பேராதனைப் பல்கலைக் கழக விரிவுரையாளர் பதவியையும் துறந்து முழு நேரமாக அரசியல் சமூக பணிகளில் ஈடுபட்டார்.

1980களின் நடுப்பகுதியில் பலஸ்தீன விடுதலை இயக்கங்களில் ஒன்றான பி.எஃப்.எல்.பி இடம் பயிற்சி பெறுவதற்காக மத்திய கிழக்குக்கு சென்றவர். அங்கு பலஸ்தீனர்களின் போராட்டம் மற்றும் அரபு, மேற்காசிய பிரச்சினைகள் பற்றி பல நுண்ணிய அவதானிப்புக்களை மேற்கொண்டார். ஆறு மாதத்திற்கு மேற்பட்ட பயிற்சி அவருக்கு மிகுந்த பிரயோசனமான அனுபவங்களைக் கொடுத்திருந்தது.

ஆராய்சி மனோபாவம் கொண்ட தோழர் முகுந்தன் தமிழ் நாட்டின் குடந்தையில் தோழர்களுக்கு அரசியல் இராணுவ வழிகாட்டியாக பயிற்சியாளராக செயற்பட்டார். தோழர்களுக்கு தூய்மை, ஒழுங்கு, ஒழுக்கம் பற்றி இடையறாது வலியுத்தி வந்தார். சுற்றாடல் பற்றிய அவதானிப்பு அவரிடம் அதிகமாக இருந்தது. புத்தகங்களைச் சேகரிப்பதும், விவசாய, கைத்தொழில் நடவடிக்கை பற்றிய இடையறாத அவதானிப்பும் அவரிடம் இருந்தன. அவை பற்றிய குறிப்புக்களை எடுப்பதோடு அரசியல், இராணுவ, பொருளாதார, சமூக, விவசாய நூல்களை நிறையவே வாசித்தார். எந்தவொரு செயற்பாட்டுக்கும் விஞ்ஞான பூர்வமான விளக்கத்தை அவர் அவாவி நின்றார்.

எளிமையாக வாழ்தல், சுயசார்பு, சொந்தக்காலில் நிற்றல் என்பன அவரால் தொடர்ந்து வலியுறுத்தப்பட்டு வந்தன. ஒரு இயல்பான காந்தீயம் அவரிடம் குடிகொண்டிருந்தது. ஆனால் அவர் பழமை வாதியல்ல. தனது சகலவிதமான உழைப்பும் தான் சார்ந்த சமூகத்திற்காகவே என்பதில் அவர் ஆழ்ந்த நம்பிக்கை கொண்டிருந்தார். அதறகப்பால் அவர் சிந்தித்தது கிடையாது.

சேலம் பயிற்சி முகாமில் அவரது வழிகாட்டலின் கீழ் பயிற்சி பெற்ற தோழர்கள் பலர் தன்னம்பிக்கையுடைய, உந்துதல் உடைய, சமூகப்பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்கக்கூடியவர்களாக உருவாகியிருப்பதை அவதானிக்க முடியும்.

தோழர்களுக்கு இயந்திரீக ரீதியான பயிற்சிகளை மாத்திரமல்ல சமூகத்தில் எதிர் நீச்சல் போட்டு வாழ்வதற்கான முறைகளையும் கற்றுக்கொடுத்தார்.

இந்திய–இலங்கை ஒப்பந்தம் கைச்சாத்தாகி இந்திய அமைதி காப்புப்படை இங்கு பிரசன்னமாகியிருக்கையில் நாங்கள் மீண்டும் வேலை செய்வதற்கான அருமையான சந்தர்ப்பமாகவே அதைக் கருதினார்.

1986 இறுதிவாக்கில் இயக்கத்தின் செயற்பாடுகள் புலிகளால் முடக்கப்பட்ட போதும் கூட அவர் மனந்தளரவில்லை. எதையும் பூச்சியத்தில் இருந்து கூட தொடங்கலாம் என்ற அசையாத நம்பிக்கை கொண்டவர்.

புரட்சிக்காலம் அல்லது அதற்கு முந்திய காலத்தில் சோவியந் நாவல்களில் வந்துகொண்டிருந்த தேடலுள்ள பிடிவாதமுள்ள மனிதர்கள் போலவே தோழர் முகுந்தன் செயற்பட்டார்.

இந்திய அமைதிப்படையின் வருகையின் பின்னர் இராமேஸ்வரத்தில் இருந்து சக தோழர்களுடன் அபாயம் நிறைந்த பயணத்தை மேற்கொண்டு மன்னார் வந்தடைந்தார். புலிகளிடம் அகப்பட்டால் அத்தனை பேரையும் கொன்று விடுவார்கள். மன்னாரிலிருந்து வவுனியா வந்த முகுந்தன் அவர்கள் வவுனியாவில் ஈ.பி.ஆர்.எல்.எவ் இன் பொறுப்பை ஏற்றுச் செயற்பட்டார்.

தோழர்கள் சொந்த காலில் நிற்கவேண்டும் என்பதை வலியுறுத்திய தோழர் முகுந்தன் மிளகாய்ந்தோட்டம் செய்து அல்லது வேறு ஏதாவது தொழில்கள் செய்து அதில் வரும் வருமானத்திலேயே சீவிக்க வேண்டும் என எதிர் பார்த்தார். பொதுமக்களே மனமுவந்து அளிக்கும் நன்கொடைகளிலேயே வேலை செய்ய வேண்டும் என எதிர்பார்த்தார். மிகமோசமான கஷ்டமான சூழ்நிலைகளில் கூட அவ்வாறுதான் அவர் நடந்து கொண்டார். கப்பக்கலாச்சாரத்தில் என்றும் அவர் நம்பிக்கை வைத்தது கிடையாது. நாம் மானிடர்களாகவே வாழவேண்டும், மானிடர்களாகவே போராட வேண்டும் என அவர் விரும்பினார்.

வவுனியாவில் அவர் செயற்பட்ட போது ஒரு இரவு வெட்ட வெளியில் படுத்துறங்கிய போது பாம்பு தீண்டி உடனடியாகச் சிகிச்சை மேற்கொள்ளப்பட்டதால் அவர் உயிர் தப்பினார்.

இதேபோல் மயிலிட்டிப்பகுதியில் அவர் ஒரு வீட்டில் இரவு உறங்கிக்கொண்டிருந்த சமயம் புலிகளின் துப்பாக்கி சன்னச் சிதறல்கள் பட்டுக்காயமடைந்தார். நீண்ட நாள் தீவிர சிகிச்சையின் பின்னர் உயிர் பிழைத்தார்.

கட்சியின் பிரசுரங்கள், பத்திரிகைகள், வெகுஜன வேலைகள் பற்றி அவர் அதிக அக்கறை கொண்டிருந்தார்.

கையில் ஆயுதங்கள் இருக்கையில் தறிகெட்ட செயற்பாடுகளில் ஈடுபடும் நபர்களை கட்டுப்படுத்துவதிலும் அவர் உறுதியுடள் செயற்பட்டார். அவர் யாழ் மாவட்டத்தில் பொறுப்பாளராக இருந்த போது ஆயுதங்களுடன் மக்கள் மீது ஏஜமான்களாக இருந்த அராஜக வாதிகள் மீது நடவடிக்கை எடுப்பதில் பின்நிற்கவில்லை.

ஒவ்வொரு தோழருடைய சொந்த வாழ்வு நன்மை தீமைகள் பற்றியும் அவர் அக்கறை செலுத்தினார். உதாரணமாக பல நூறு தோழர்கள் இருக்குமிடத்தில் அவர் ஒவ்வொருவருடைய பிறந்த நாளையும் அறிந்து வைத்திருப்பதும் அவர்களுக்கு வாழ்த்துத் தெரிவிப்பதும். முக்கியமான விடயமாக கருதினார்.

வடகிழக்கு மாகாணசபையின் அங்கத்தவரான தோழர் முகுந்தன் மாகாண அரசின் யாழ்மாவட்ட இணைப்பாளராகவும் செயற்பட்டார்.

வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகக்கொண்ட தோழர் முகுந்தன் திருமணம் செய்யவில்லை. கல்வி கேள்விகளில் சிறந்த குடும்பத்தில் பிறந்தவர். அவருடைய சகோதரர்கள் எல்லோரும் படித்து உயர்பதவிகளிலிருக்கிறார்கள்.

1990 முற்பகுதியில் பிரேமதாசா–புலிகள் கூட்டுச்சதியின் விளைவாக மாகாணசபையின் செய்பாடுகள் சீர்குலைக்கப்பட்டு இந்திய அமைதிகாப்புப்படை வெளியேறியதன் பின்னர் பல நூற்றுக்கணக்காண தோழர்கள் கடல் மார்க்கமாக இந்தியா சென்றனர்.

அவர்களோடு தோழர் முகுந்தனும் புறப்பட்டார். இவ்வாறு சென்ற பல தோழர்கள், அவர்களின் குடும்பத்தவர், ஆதரவளித்தவர்கள் என பலதரப்பட்டோர் கடலில் வைத்து புலிகளால் கொல்லப்பட்டனர். அல்லது கடத்திச் செல்லப்பட்டனர். அவ்வாறு புலிகளால் வழிமறிக்கப்பட்ட தோழர் முகுந்தன் தற்கொலை செய்ய முயற்சித்த போது முடியவில்லை. தன்னைத்தானே சுட்டுக்கொலை செய்ய முயற்சித்தபோதும் சன்னங்கள் வேறுபக்கம் சென்றுவிட்டன.


புலிகளால் கைது செய்யப்பட்ட முகுந்தன் சொல்லொணாச் சித்திரவதைகளுக்கு உள்ளாக்கப்பட்டதோடு மோசமான அவமானத்திற்கும் உள்ளாக்கப்பட்டார். இன்றுவரை அவருக்கு என்ன நேர்ந்தது என்று தெரியாது.

ஆனால் தனது அறிவு தெரிந்த நாள்முதல் உண்மையுடனும், விசுவாசத்துடனும் உழைத்த மனிதருக்கு நேர்ந்த துயரம் சகல நல்லிதயங்களையும் வேதனயையுறச் செய்வதாகும்.

தோழர் முகுந்தனுக்கு நேர்ந்த கொடுமைகள் புலிகளின் போராட்டம் என்பது எத்தகைய ஒழுக்கவியல் மரபுகளுக்கும் எதிரானது! பாசிச கொடுரம் நிறைந்தது! என்பதற்கு எடுத்துக்காட்டுமாத்திரமல்ல இவர்களின் தலைமையில் தமிழ் மக்களுக்கு எத்தகைய விடுதலை கிடைக்கும் என்பதை புலப்படுத்துவதுமாகும்.

இவர் தனது குடும்பம் பற்றியோ தனது தனிப்பட்ட விருப்பு வெறுப்புக்கள் பற்றியோ யாருடனும் பகிர்ந்து கொண்டது கிடையாது. இசையில் இசைக்கருவிகளில் அவருக்கு நாட்டம் இருந்தது. அவரின் இயற் பெயர் முருகநேசன் அவருக்கு ஒரு காதலி இருந்தார் என்பது எல்லோருக்கும் தெரியும். அவர் சமூகத்திற்காக வாழ்ந்த போதும், கடத்தப்பட்ட பின்னரும் அவரது உற்றார் உறவினருடன் எமக்கு எந்தத் தொடர்பும் இல்லை என்பதுதான் துயரமானது. பலரும் தாம் தமது குடும்பம் உற்ற சுற்றம் என்று இருக்கையில் எல்லாவற்றையும் தியாயகம் செய்தவர் முகுந்தன். ●

# வீரபுரத்தில் நடந்தவை! உண்மையும் பொய்யும்



தோழர் வில்வராசா

31.08.99 அன்று வவுனியா செட்டிகுளம் வீரபுரம் கிராமத்தில் நடைபெற்ற கண்ணிவெடித்தாக்குதலில் ஒரு இன்ஸ்பெக்டர் உட்பட நான்கு பேர் பலியாகியதும் வீதி திருத்த வேலைகளில் ஈடுபட்டிருந்த இரண்டு பேரும் இன்னுமொரு சிவிலியனும் காயமடைந்தது யாவரும் அறிந்ததே.

இந்தக் கிளைமோர் கண்ணி வெடித்தாக்குதலை நடாத்தியவர்கள் வீரபுரம் பிள்ளையார் கோவிலில் வழிபாட்டுக்காக மக்கள் கூடியிருந்த சமயத்தில் தாக்குதலை நடத்தியுள்ளார்கள்.

இச்சம்பவத்தையடுத்து பீதியடைந்த மக்கள் வீரபுரத்தில் உள்ள ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் காரியாலயத்தினுள் புகலிடம் தேடி ஒதுங்கினர்.

இச்சம்வத்தில் காயப்பட்ட பொதுமகன் ஒருவரை ஈ.பி.ஆர்.எல்.எவ் ஐச் சேர்ந்த மறைவாணன் என்பவர் வவுனியா வைத்தியசாலைக்கு அழைத்துச் செல்கையில் வழியில் வைத்துக் காயப்பட்டவரும் தாக்கப்பட்டதோடு மறைவாணன் கைதுசெய்யப்பட்டார். காயமடைந்தவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

சம்பவம் நடைபெற்று அரை மணி நேரத்திற்குப் பின்னர் கோயிலுக்குச் சென்ற தனது சகோதரரியைக் காணாததாலும், வேறு யாராவது காயமடைந்திருக்கிறார்களா எனப்பார்ப்பதற்காகவும் சம்பவம் நடைபெற்ற இடத்திற்குச் சென்ற தோழர் வில்வராசா அவ்விடத்தில் வைத்து பொலிசாரினால் சுடப்பட்டார்.

இவ்போது அவரைப் பயங்கரவாதியெனக்காட்ட முயற்சி நடைபெறுகிறது. அவரிடம் கைக்குண்டுகள் மற்றும் ஆயுதங்கள் இருந்ததாகவும் மற்றும் பிஸ்கட், தண்ணீர் போத்தல் இருந்ததாகவும் கதை சோடிக்கப்பட்டது.

இதன் மூலம் அவ்விடத்திற்குச் சென்ற பொலிசார் தாம் செய்த கோழைத்தனமான தவறை மூடி மறைத்துப் பட்டிகளை உயர்த்த முனைகிறார்கள்.

இச்சம்பவம் தொடர்பாக முறையாக நீதி விசாரணை நடத்தப்பட வேண்டும். உண்மை கண்டறியப் படவேண்டும்.

யுத்தப்பிரதேசத்தில் காயப்பட்ட மனிதர்களுக்கு உதவும் சாதாரண மனிதக் கடமை கூட மறுக்கப்படுமானால் அதுமிகவும் பாரதூரமான விடயமே.

காயப்பட்டவரைக் கூட்டிச் சென்றவர் தாக்கப்பட்டிருக்கிறார்.

தனது சகோதரரியைத் தேடிக் சென்றவர் சுட்டுக் கொல்லப்பட்டிருக்கிறார். அதன் பின்னர் அவர் மீது பயங்கரவாதி என முத்திரை குத்தப்படுகிறது.

அப்படியானால் சாதாரண மனிதக் குணாம்சத்துடன் நடந்துகொள்வதற்கே உரிமையில்லையென்றாகிறது. இவ்வாறானால் இங்கு ஜனநாயக அரசியல் இயக்கங்கள், மனித உரிமை அமைப்புக்கள் எவ்வாறு செயற்படமுடியும்.

வவுனியாவில் இப்போது ஏதா

தொடர்ச்சி 5ம் பக்கம் ☞

# போபர்ஸ் பீரங்கியின் தரம் கார்கில் முகடுகளில் நிரூபணம்

அலெக்சாண்டர்

இந்திய ஜவான்களின் தீரம் மிகு போராட்டத்தால் காஷ்மீருக்குள்ளான பாகிஸ்தானின் ஊடுருவல் நிறுத்தப்பட்டுள்ளது. பிரிட்டிசாரிடமிருந்து இந்தியா விடுதலை பெற்ற போது முஸ்லீம் மக்களுக்கான ஒரு நாடாக பாகிஸ்தானை பிரித்து தருமாறு ஜின்னா வலியுறுத்தினார். காந்தியும் அதற்குச் சம்மதித்தார்.

ஆனால் இந்த சரித்திர நிகழ்வுக்குப்பின் அன்று காஷ்மீரை ஆக்கிரமிக்க முதலில் யுத்தத்தை தொடங்கியது பாகிஸ்தான்.

இந்தியா அதனைத் தடுத்து நிறுத்தியது. இதனாலேயே காஷ்மீர் "அசாத் காஷ்மீர்" ஜம்மு காஷ்மீர் என இரண்டாகப் பிரிக்கப்பட்டு ஒரு பகுதியை பாகிஸ்தான் ஆக்கிரமித்துக்கொண்டது. மிகுதியையும் ஆக்கிரமிக்கவே பாகிஸ்தான் முயற்சி செய்து வருகின்றது.

காஷ்மீர் விடுதலை வாதிகள் தமது விடுதலைக்காகப் போராடுகின்றார்கள் என்ற பெயரில் காஷ்மீர் தீவிரவாதிகளுக்கு பயிற்சியும், ஆயுதங்களும் கொடுத்து காஷ்மீருக்குள் எப்பொழுதும் ஓர் ஸ்திரமற்ற நிலையையே பாகிஸ்தான் ஏற்படுத்தி வருகின்றது.

இப்பொழுது முழுக்காஷ்மீரையும் ஆக்கிரமிப்பதை நோக்கமாகக் கொண்டே பாகிஸ்தான் இராணுவத்தையும் ஆப்கானிஸ்தானி இஸ்லாமிய வெறியர்களையும் காஷ்மீருக்குள் அனுப்பி கார்கில்லை கைப்பற்றியது.

காஷ்மீர் பிரச்சினையை இருதரப்புக்குமிடையில் நடக்கும் பேச்சுவார்த்தை மூலம் தீர்க்க வேண்டுமென சிம்லா ஒப்பந்தமும், பின்னர் தற்பொழுது ஏற்படுத்தப்பட்ட லாகூர் ஒப்பந்தமும் தெளிவாகக் கூறுகின்றது.

அது மாத்திரமல்லாமல் பிரச்சினை தீரும் வரையில் சர்வதேச ரீதியாக அங்கீகரிக்கப்பட்ட எல்லை ஒன்றும் ஏற்படுத்தப்பட்டது. (lisne of confrol) ஆனால் இவை எல்லாவற்றையும் மீறிய பாகிஸ்தான் இராணுவத்தின் நடவடிக்கைகள் பயித்தியக்காரத்தனமானதும், இப்பிராந்தியத்தில் யுத்தத்தை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டது மாகும்.

ஆனால் 'தலைக்கு வந்த ஆபத்து தலைப்பாகையுடன் போனது' போல பாகிஸ்தானின் ஊடுருவல் காரர்களால் ஏற்படவிருந்த பெரும் ஆபத்து இந்தியாவின் சகிப்புத்தன்மையாலும் நிதானப்போக்காலும் தவிர்க்கப்பட்டிருக்கிறது.

எல்லை மீறிவந்த ஆக்கிரமிப்பாளர்கள் விரட்டியடிக்கப்பட்டிருக்கிறார்கள். இந்திய ராணுவம் இத்துடன் நிறுத்திக்கொண்டது- இரு நாடுகளுக்கிடையில் நிகழ இருந்த ஒரு பெரும் யுத்தம் தடுக்கப்பட்டிருக்கிறது. இதன் மூலம் தெற்காசிய மக்களுக்கும்-உலக மக்களுக்கும்-தான் ஒரு யுத்த ஆதிக்கம் பிடித்த நாடு அல்ல என்பதை இந்தியா உணர்த்தியுள்ளது.

வீண் சண்டைக்கு போகாதே- வந்த சண்டைக்கு அஞ்சாதே- என்பது போல கார்க்கில் மலைக் குன்றுகளை ஆக்கிரமித்த ஊடுருவல்காரர்களை விரட்டியடித்த இந்திய இராணுவத்தினர், பாகிஸ்தானுக்கு ஒரு கசப்பான பாடம் புகட்டியிருக்கிறார்கள்.

இந்திய வீரர்களின் வீரம் செறிந்த தாக்குதல்கள் எதிரிகளால் மறக்கப்படமுடியாதது போல- ஜவான்களின் உயிர்த்தியாங்களை இந்திய மக்களாலும் மறக்கப்பட முடியாதது. அந்தளவுக்கு அவர்களது தியாகங்கள் மதிக்கப்படுகின்றன.

கார்கில் பனிமலைகளில் உயிர் நீத்த-காயமடைந்த ஜவான்களின் குடும்பங்களுக்கு-இந்திய அரசும்- மாநில அரசுகளும்- மக்களும் உதவிக்கரம் நீட்டியிருக்கிறார்கள். முக்கியமாக தமிழ்நாடு அரசும்-மக்களும் 40கோடி ரூபாவுக்கு மேல் நிதி அளித்திருக்கிறார்கள் என்றால் அந்த உணர்வுகளைச் சாதாரணமாக அளவிட இயலாது.

பாகிஸ்தானின் இந்த ஆபத்தான போக்கு உலக நாடுகளையே சங்கடத்தில் ஆழ்த்தியுள்ளது. கார்க்கில் யுத்தம் முடிவுற்றாலும்- அப்பகுதிகளில் நிலவும் பதட்ட நிலமை கவலைக்குரியதாகவே தொடர்கின்றது.

தெற்காசியாவில் அங்கம் வகிக்கும் உறுப்பு நாடுகளான, இலங்கை-மாலைதீவு-நேபாளம்-பங்களாதேஷ்-பூட்டான் ஆகியன, இரு நாடுகளுக்கிடையில் இருக்கும் இந்த முறுகல் நிலைமையில் என்ன முடிவு எடுப்பதென்று தெரியாமல் கைகளை பிசைந்து நிற்கின்றன.

இந்தியாவும்-பாகிஸ்தானும் பேச்சு வார்த்தையில் கவனம் செலுத்தி-பிரச்சினைகளுக்கு தீர்வுகாணவேண்டும் என்று தமது ராஜதந்திர அறிவுரைகளை மட்டுமே சொல்லியிருக்கின்றன. அந்த நாடுகளால் முடிந்ததும் அவ்வளவுதான்.

ஆனால் அமெரிக்கா-பிரிட்டன்-ரஷ்யா, பிரான்ஸ், ஜேர்மனி போன்ற மேற்குலக நாடுகள் பாகிஸ்தானை கடுமையாக கண்டித்து-இந்திய மண்ணிலிருந்து ஊடுருவல்காரர்களும்-படைகளும் உடன் விலகிப் போக வேண்டும் என்று எச்சரித்திருந்தன. எங்களுக்கும்- ஊடுருவல்காரர்களுக்களுக்கும் எந்தவித தொடர்புமில்லை என்று சொல்லிவந்த பாகிஸ்தான் அரசுக்கு மேற்குலக நாடுகளின் இந்த நிலைப்பாடு எரிச்சலை ஊட்டினாலும்; வேறு வழியின்றி அதற்கு அடிபணிய வேண்டியிருந்தது. இது போர்வெற்றி மட்டுமல்ல- இந்தியாவுக்கு கிடைத்த மாபெரும் இராஜதந்திர வெற்றியுமாகும்.

கார்க்கில் போர்முனையில் ஏற்பட்ட தோல்வியால் பாகிஸ்தான் பிரதமர் நவாஷ் செரிப்புக்கும் அவரது இராணுவத்திற்குமிடையில் இன்று உறவுகள் விரிசல் அடைந்திருக்கிறது இந்த நிலையில் தனது பதவியை தக்கவைத்திருப்பதற்கும்- இராணுவ அதிகாரிகளின் கோபத்தை தணிப்பதற்கும் அவர் காஷ்மீர் பிரச்சினையில் தீவிரமான போக்கையே கடைப்பிடிப்பார் என்று அரசியல் அவதானிகள் கருதுகிறார்கள்.

இதன் விளைவு-பாகிஸ்தானின் அணுகுமுறை-இந்திய பிரதேசத்தில் வன்முறையை கட்டவிழ்த்து விடுவதாகவே முடியும். குறிப்பாக, மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட காஷ்மீர் அரசை வன்முறை மூலம் செயலிழக்க செய்வதும்-காஷ்மீர் அரசியல் தலைவர்களை படுகொலை செய்வதுமாகும்.

பாகிஸ்தான் உளவுப்படையினரின் செயல்பாடுகள், கார்க்கில் போர் முனையில் ஏற்பட்ட ரணங்களை ஆற்றுவதற்கு காஷ்மீர் தீவிரவாதிகள் மூலம் வன்முறையை இந்தியாவுக்கு எதிராக கட்டவிழ்த்து விடுவதுதான்.

இந்திய நிலப்பரப்பில் தீவிரவாதிகளின் வன்முறைகள் அதிகரிக்க அதிகரிக்க இந்தியாவின் போக்கும் கடுமையாகும். மீண்டும் பீரங்கிகள் பாகிஸ்தான் எல்லை நோக்கி முழங்கும் ஆபத்து அதிகரித்தே செல்லும். இந்த மோசமான நிலைமைதான் இன்று தொடர்கின்றது.

ஆனால் கார்க்கில் யுத்தத்தில் இந்தியாவின் பீரங்கித் தாக்குதல்களை ஊடுருவல்காரர்கள் சுலபத்தில் மறந்துவிடமாட்டார்கள். இந்த தாக்குதல்களின் சிறப்பம்சம் என்னவென்றால் போபர்ஸ் பீரங்கிகள் தான்.

சுவீடனின் தயாரிப்பான இந்த பீரங்கியின் செயல்பாடுகள் அளப்பரியது. முன்பு எதிர்கட்சிகளால் விமர்சிக்கப்பட்டு, ராஜீவ் காந்தியின் குடும்பத்தின் பெயருக்கே களங்கத்தை ஏற்படுத்திக்கொண்டிருந்த இந்த போபர்ஸ் பீரங்கிகள் விமர்சித்தவர்களை வாயடைக்க வைத்திருக்கிறது. ஊடுருவல் காரர்கள் பதுங்கியிருந்த குன்றுகளை தகர்த்தெறிந்து-தரைப் படைக்கு வழி ஏற்படுத்தி கொடுத்ததும் இந்த பீரங்கிகள்தான். இதன் விலை அதிகமாக இருந்ததால் பல அரசியல் சர்ச்சைகளை ஏற்படுத்தியது என்பது உண்மை.

ஆனால் இதன் தரம் உயர்ந்திருந்தது. இந்த யுத்தத்தில் இதன்திறன் நீரூபிக்கப்பட்டிருப்பதால் குற்றச்சாட்டுகளின் சுமை குறைந்துள்ளது. இந்தியாவின் பாதுகாப்புக்கும்-தெற்காசியாவின் ஸ்திரத்தன்மைக்கும் இந்தியா தனது முப்படைகளையும் நவீனப் படுத்த வேண்டும் என்ற ராஜீவ் காந்தியின் கனவை இன்றைய ஆட்சியாளர்கள் நனவாக்கினாலே போதும்.

இந்தியா-பாகிஸ்தான் யுத்தம் காஷ்மீர் பிரச்சினைக்காக இரு முறையும்-பங்களாதேஷ் நாடு உருவாகுவதற்காக ஒரு முறையும் நடந்துமுடிந்துள்ளன. இந்த மூன்று யுத்தங்களும் பாகிஸ்தானுக்கு தோல்வியை கொடுத்ததன் தாக்கம் இன்றுவரை இந்தியாவுக்கு எதிரான ஒரு போக்கையே பாகிஸ்தான் கடைப்பிடித்துவருகின்றது.

என்ன விலைகொடுத்தாகிலும் காஷ்மீரை இந்தியாவிடம் இருந்து பிரித்து-எடுத்துவிடவேண்டும் என்ற பாகிஸ்தானின் முயற்சிகள் இன்றுவரை தோல்வியிலேயே முடிந்திருக்கின்றன. ஆனால் இந்தியாவின் ஸ்திரத்தன்மையை சீர்குலைப்பதற்கு தீவிரவாதிகளை உற்பத்தி செய்யும் பாகிஸ்தான், இந்தியாவுக்கு எதிராக வன்முறைகளை ஏவிவிட்டு-படுகொலைகளை செய்வதில் குறிப்பிடத்தக்க அளவு வெற்றிகளை கண்டிருக்கிறது.

அத்துடன், உல்பா- காலிஸ்தான் (பஞ்சாப்)-விடுதலைப்புலிகள் போன்ற தீவிரவாத இயக்கங்களுக்கு பணம்-ஆயுதங்கள் கொடுத்து இருக்கிறது. இதை இந்தியாவுக்கு எதிராக உசுப்பிவிட்டு-படுகொலைகளை செய்விப்பதிலும் பாகிஸ்தான் வெற்றியே பெற்றிருக்கிறது. ராஜீவ் காந்தியின் படுகொலைக்கு பின் இந்தியாவின் ஸ்திரத்தன்மை எந்தளவுக்கு பாதிக்கப்பட்டிருக்கிறது-என்பதை அடிக்கடி நிகழும் தேர்தல்களே சுட்டிக்காட்டுகின்றன. இருப்பினும் இந்தியா ஒரு ஜனநாயக நாடாக இருப்பதால் எவ்வளவு சீர்குலைவுகளுக்கு மத்தியிலும் தாங்கி-நிமிர்ந்து நிற்கின்றது.


பாகிஸ்தான் ஒரு விடயத்தை நினைவில்கொள்ள வேண்டும். காஷ்மீர் பிரச்சினையில் மூக்கை நுழைத்து இந்தியாவுடன் ஒரு முழு அளவிலான யுத்தத்திற்கு போனால் அது பாகிஸ்தானுக்குத்தான் ஆபத்தாக முடியும்.

யுத்தம் என்று இந்தியா எழுந்து நின்றால் பாகிஸ்தான் சாம்பல் மேடாகிவிடும். இதை கூறியவர் வேறுயாருமல்ல பாகிஸ்தான் இராணுவத்திலிருந்து ஓய்வு பெற்ற ஜெனரல் ஒருவர்.

பேச்சு வார்த்தையின் மூலம் காஷ்மீர் பிரச்சினையை தீர்க்க வேண்டும் என்று கூறிவரும் பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் செரிப்புக்கு இந்திய பிரதமர் வாஜ்பாய் அவர்கள் பதிலடி கொடுத்திருக்கிறார்.

'இந்திய மண்ணில் பாகிஸ்தான் தீவிரவாதிகள் வன்செயல் படுகொலைகளை நிறுத்தும்வரை எந்த பேச்சுவார்த்தைக்கும் இடமில்லை' அத்துடன் பாகிஸ்தானை ஒரு பயங்கரவாத நாடாக அறிவிக்கவேண்டும் என்று அமெரிக்காவை கேட்டுமிருக்கிறார்.

ஆக இந்தியா - பாகிஸ்தான் பிரச்சினை இன்றோ-நாளையோ முடியும் பிரச்சினை அல்ல. ●



## நச்சுக்கொடி

அழு பெண்ணே அழு
உன் ஒப்பாரிப்பாடல்
ஏழு கடல் தாண்டி
எழுகிறது
என் செவியில்
ஊரடங்கு அமுலிருந்த
நடுஇரவில்
உன் வயிற்றில்
வலியெழுந்த போதில்
விழுந்த அலறல்
இன்றும் அதிர்கிறது
என்னில்.
அன்று கோடிப் புறத்து
எலுமிச்சை அடியில்
தாட்டுவிட்ட நச்சுக்கொடி
மண்ணில் கலந்து
மடிந்திருக்க
வாய்ப்பில்லை.
ஏணையிலே கிடத்தி
நீ படித்த தாலாட்டும்
ஏணை கட்டுதற்கு
வீடு கோப்புசத்து
விட்டத்தில்
கொழுவி விட்ட
தோரவடக்கயிறும்
நினைவில் முட்டுது
இன்றும்.
கண்மூட விழிக்கு
முன்னெழுந்த
கணப் பொழுதுள்
களத்துள் பாய்ந்து
வெடித்து சிதறி
காற்றில் கலந்துவிட்டான்
உன் பாலன்.
கட்டிப் புரண்டு
கதறி அழுகின்றாய்
நீ
என்ன செய்வாய்
வெடிவால் முளைக்கு
முன்னர்
அழைத்து
மூளை நீக்கி
கபாலத்தை கோதாக்கி
சலவையிட்டு
துடைத்து
வெடிமருந்தை நிரப்பி
ஏவிவிடும் கலையும்
மாவீரம் செய்கின்ற
வல்லமையும்
வாய்த்திருக்கு
அவர்க்கு
அழு பெண்ணே!
அழு
மாவீரமென்று
சோகத்தை புதைத்து
வெதும்பத் தெரியாத
பேதை நீ
அழு
உன்
பிள்ளைக்காய்
முற்றத்தில் தவழ்கின்ற
குழந்தைக்காய்
ஒழுங்கையில் நடக்கும்
கர்ப்பிணி வயிற்று
சிசுவுக்காய்
ஆயுதக் குதங்களாய்
நிரவிவழியும்
ஆயிரக் கணக்கான
சிறுவருக்காய்
அழு
உன் ஒப்பாரிப் பாடல்
எட்டுத்திக்கும்
ஒலிக்கட்டும்.

நன்றி;
உயிர்நிழல்


# புலிகளை ஆதரிக்கும் நண்பனே நான் சொல்வதை சில நிமிடங்கள் பொறுமையோடு கேள்!

மாறுபட்ட கருத்துக்களைக் காதுகொடுத்துக் கேட்பதற்குக் கூட நீ உன்னையறியாமலேயே உனது சுதந்திரத்தை இழந்து நிற்கிறாய் என்பதை நான் அறிவேன்.

புலி உறுப்பினர்களுக்கும் புலிகளை ஆதரித்து நிற்பவர்களுக்கும் உள்ள இந்தப்பரிதாபமான நிலையை நான் மட்டுமல்ல இந்த உலகும் ஏன் உலகின் பலபாகங்களிலுமுள்ள பலரும் நன்கறிவர்.

புலிகளைப் பெரும்பாலும் பலர் தத்தமது சுயநலன்களுக்காகவே ஆதரிக்கின்றனர்–ஆதரித்துப்பேசுகின்றனர்–ஆதரித்துச் செயற்படுகின்றார் என்பது பொதுவாகத் தெரிந்த உண்மையெனினும், நான் விழிக்கும் நீ ஒரு சுயநலக்காரனல்ல, உனது சுய நலனுக்காகவே புலிகளை ஆதரிக்கிறாய் என்று நான் கருதவில்லை.

உனது மனதளவில் உனது பகுத்தறிவு எல்லைகளுக்கு எட்டிய வகையில் 'புலிகள் தமிழ்மக்களின் விடுதலைக்காகப் போராடுகின்றார்கள்', என்றும் வேறு எவருமில்லாத நிலையில் இப்போது 'புலிகள் மட்டும் தானே சிங்கள இனவெறியர்களுகெதிராக போராடிக்கொண்டிருக்கிறார்கள்; எனவும் 'புலிகள் பலவீனப்பட்டாலோ, புலிகளைப் பலவீனப்படுத்தினாலோ சிங்கள இன ஆட்சியாளர்கள் தமிழ் மக்களுக்கு கொடுக்க வேண்டிய உரிமைகளைச் கொடுக்கமாட்டார்கள்' என்றெல்லாம் நீ நம்புகிறாய் என்பதை நான் அறிவேன்.



உன் அறியாமையையும், நீ எவ்வளவு தூரம் அறிவு ரீதியாக ஏமாற்றப்பட்ட ஓர் ஆளாக இருக்கிறாய் என்பதைப் பார்க்கையிலும், நீ இத்தனை அளவுக்கு சிந்தனை ரீதியாகப் பின் தங்கியிருக்கிறாய் என்பதையும் சிந்தித்துப்பார்க்கையில் உன்னை நினைத்து எனக்குக் கோபம் எதுவும் ஏற்படவில்லை. மாறாக கவலையும் வேதனையுமே எஞ்சி நிற்கின்றன.

புலிகள் தொடர்பாக நீ கொண்டுள்ள கருத்துக்களின் பிழைகளை விரிவாக விளக்க நான் முனையவில்லை.

நீ கொண்டுள்ள கருத்துக்கள் தொடர்பாக நீயே சில கேள்விகளை அவற்றின் மீது எழுப்பிப்பார்–சுருக்கமாக விடைகாணத் தேடிப்பார்! அப்போது நீ எப்படி ஒருமாபெரும் தவறை இழைத்துக்கொண்டிருக்கிறாய் என்பதைப் புரிந்து கொள்வாய்.

புலிகள் எப்போதாவது யாருடைய எந்தச் சுதந்திரத்தையாயினும் அங்கீகரித்திருக்கிறார்களா?

யாரும் துணையற்றவர்களாக இன்று புலிகள் நிற்பதற்கு இந்தப் புலிகள் தானே காரணம்?

இன்றைக்கு யாருடைய சுதந்திரத்தையும் அங்கீகரிக்காத புலிகள் யாருடைய சுதந்திரத்துக்காக போராடுகிறார்கள்? பிரபாகரனின் சுதந்திரத்துக்காகவா? யாருக்காக இந்தப் போர்? ஒரு பிரபாகரனின் சர்வாதிகாரத்துக்கான போருக்காகவா இந்தத் தமிழினம் இப்படி அழிந்து சிதைந்து அலைபட்டுப் போயிருக்கிறது?

பிரபாகரனின் சர்வாதிகாரத்தைக் கேள்விக்குள்ளாக்கும் எவரும் புலிகளினால் துரோகி என்ற பட்டப்பெயருடன் கொல்லப்படுவார்கள் என்பதை நீ அறிவாயல்லவா? நீ இன்றைக்கு உண்மையில் உள்ளடக்கி வைத்திருக்கும் சுதந்திர உணர்வு எப்போதாவது வெளிப்படுமானால் நீயும் ஒரு நாள் ஏதோ ஒரு வீதியின் முனையில் துரோகிப்பட்டத்துடன் புலிகளால் கொலை செய்யப்பட்டுக்கிடப்பதை உன்னால் தடுக்க முடியாது.

யாழ்ப்பாண அரச அதிபர் பஞ்சலிங்கம் தொடக்கம் கூட்டணி மதிமுகராசா வரை நடந்ததை நீ சரியாக அறிவாயானால் நீ உன் நிலைமையையும் அறிந்து கொள்வாய்.

புலி பயத்தினாலே கொல்லுகிறது; பசியினாலே கொலை செய்கிறது; சீண்டினால் கொலை செய்யும் என்றெல்லாம் புலிகளின் கொலைகளுக்கு நீ விளக்கம் சொல்லுவாயானால் இந்தப்புலிகளுக்கும் எமது மக்களுக்கும் உனக்கும் எனக்கு என்னதான் சம்பந்தம்.

எம்மைப் பலிகொடுத்தாயினும் இந்தப் புலிகளைப் பாதுகாப்பதற்கு அவசியமெதுவுமில்லை புலிகளால் தமிழினம் அழிந்தது தான் மிச்சம் அழிந்து கொண்டிருக்கும் புலிகளைக்காப்பாற்ற முற்படுவதற்கு தமிழ் மக்களுக்கு மேலும் தேடித்தரும்.

இதுதான் உண்மை! நீ நினைக்கிறாய் தமிழினத்துக்காகப் புலிகள் செயற்படுவதாக! அது உண்மையல்ல. அழிவையே இந்தப் புலிகள் தமக்காகவே தான் தமிழினத்தை அழித்துக்கொண்டிருக்கிறார்கள்.

இந்தப் புலிகள் எம் தமிழினத்துக்கு செய்துள்ள ஏதாவதொரு சிறு நன்மையையாவது உன்னால் சிந்தித்துப்பார்க்க முடிகிறதா?

தமிழினத்தை இந்தப் புலிகள் பாதுகாத்ததாக இந்த 20ஆண்டு கால வரலாற்றில் ஏதாவது ஒரு உதாரணத்தை உன்னால் சொல்ல முடியுமா?

புலிகள் தொடர்ந்த சண்டை பிடித்துக்கொண்டிருக்கிறார்கள். நம் இனத்தின் ஆற்றல் மிக்க இளைஞர்களை இளம் சிறார்களை வக்கிரம்மிக்க சார்புகளினால் நடத்தப்படும் போர்க்களத்தில் புலித்தலைவர்கள் பலி கொடுத்துக்கொண்டிருக்கிறார்கள்.

ஓரடியாவது முன்னேறியிருக்கிறார்களா? இவர்களது முன்னேற்றம் சிறிலங்கா அரசாங்கத்தினால் அனுமதிக்கப்பட்டாலொழிய எந்தச் சந்தர்ப்பத்திலும் நடைபெற்றதில்லை.

இந்தப் புலிகளால் எமது மக்கள் உதவிசெய்யக்கூடிய நண்பர்களையெல்லாம் இழந்து போயிருக்கிறார்கள்; உலகில் எந்த மூலையிலும் எமது மக்களின் துன்பங்களுக்கு எந்த அனுதாபமும் இல்லாமல் போய்விட்டது.

1983ம் ஆண்டு இருந்த நிலையையும் இன்றைய நிலையையும் ஒப்பிட்டுப்பார்.

பிரபாகரனின் பணப்பொட்டலம் போய்ச் சேர்ந்தாலொழிய வீரமணி, நெடுமாறன் கூட இலங்கைத் தமிழர்களை நினைத்துப் பார்க்கமாட்டார்கள்.

இந்திய மண்ணில் இலங்கைத் தமிழ் மக்கள் அகதிகளாக இருப்பதைக்கூட தமிழகத்தலைவர்களும் தமிழக மக்களும் விரும்பவில்லை. இந்த நிலை எப்படி ஏற்பட்டது. இந்நிலையை புலிகளால் மாற்றமுடியாது.

யாழ்ப்பாணத்தில் புலிகள் தமிழர்களைத்தான் சுட்டுக்கொல்ல முடியும். ஆங்காங்கே சில் இராணுவ வீரர்களை ஒழிந்து நின்று கொல்ல முடியும். யாழ்ப்பாணத்தை மீண்டும் புலிகள் இராணுவ ரீதியாகக் தமது கட்டுப்பாட்டில் கொண்டுவருவது என்பது புலிகளால் நினைத்துக் கூடப்பார்க்க முடியாது.

வவுனியா–யாழ்ப்பாண வீதி வழியாகப் போக்குவரத்து நடைபெற்றால் யாழ்ப்பாணத்தில் பொருட்கள் தட்டுப்பாடு இருக்காது. யாழ்ப்பாணத்தில் உற்பத்தி செயற்படும் பொருட்களுக்கு உயர்ந்த விலை கிடைக்கும் இதனால் யாழ்ப்பாணத்து மக்கள் தானே நன்மையடைவார்கள்.

ஆனால் இதனை விடுவதற்குப் புலிகள் தயாராக இல்லை. காரணம் தமிழ் மக்கள் சுமுகமாக வாழ்க்கை நடத்தினால் எங்கே தமிழ் மக்கள் புலிகளை மறந்து விடுவார்களோ என்பதுதான் புலிகளின் பயம்.

தமிழ் மக்களின் மத்தியில் புலிகளுக்கு முக்கியத்துவம் இருக்கவேண்டும். தமிழ் மக்கள் துன்பத்திலும் துயரத்திலும்; இழப்பிலும் அழிவிலும் இருக்கவேண்டும் என்ன! சமூக அக்கறை! என்னே! தமிழினப்பற்று.

சொந்த இனத்தின் துன்பத்திலும் துயரிலும் இழப்பிலும் இழிவிலும் முக்கியத்துவம் தேடும் இவர்களா? தமிழ் மக்களைக் காப்பாற்றுவார்கள் தமிழ் மக்களுக்கு முன்னேற்றமான வாழ்வை ஏற்படுத்துவார்கள்?

சொல்லுபவன் எதைச் சொன்னாலும் கேட்பவனுக்கு மதி எங்கே போய் விட்டது? என்று தமிழர்களைப் பார்த்து மற்ற இனத்தவர்கள் தேசத்தவர்கள் கைகொட்டி கேரோ செய்யும் நிலைக்கு இலங்கைத்தமிழினம் சென்றிருப்பதை நீ உணர்கிறாயா?

புலிகளின் 'மகாவீரப்பிரதாபங்களை' இங்கு முழுமையாக அடக்க முனைந்தால் இடம் போதாது! இல்லை! எழுதி முடியாது?

தாங்கள் மட்டும் தனியாக நின்று தமிழ் மக்களின் விடுதலையைப் பெறப்போவதாகக் கூறினார்கள் தமிழ் அணிகள் மீது தாக்குதல் தொடுத்து பல நூற்றுக்கணக்கானவர்களை மனித நாகரீகத்துக்கே அடுக்காத வகையில் கொடூரமான முறையில் கொலை செய்தவர்களால்லவா இந்தப் புலிகள்!

ஆனால் 1987இல் வடமராட்சியிலிருந்து 'விடுதலை யுத்த நடவடிக்கை' என்ற பெயரில் அரசுப் படைகள் யாழ்ப்பாண நகரை நோக்கி முன்னேறிய போது மண்டை தீவுக்கு ஓடிப்போய் இந்தியா போக படகுகளைத் தயார்படுத்தி கொண்டிருந்தவர்கள் அல்லவா இந்த வீரப்புலிகள்!

இவர்களைக் காப்பாற்றி இவர்களுக்கு மீண்டும் நம்பிக்கையூட்டியது சாப்பாட்டுப் பொட்டலங்களோடு வந்த இந்திய விமானப்படையின் விமானங்களல்லவா!

உலகின் நான்காவது படையையே ஓட ஓடவிரட்டியதாக பெருமை கூறிக்கொள்ளும் புலிகள் இன்று உலகின் ஐம்பதாவது படைக்கு ஈடுகொடுக்க முடியாமல் தொடர்ந்து பின்னேறிக்கொண்டு தங்கள் கட்டுப்பாட்டில் சார்ந்திருந்த இடங்களையெல்லாம் விட்டோடுவது ஏன்?

ஓர் இடம் அரசபடையின் கட்டுப்பாட்டில் வந்தவுடன் அந்தப் பகுதிகளில் வாழும் தமிழ் மக்கள் மிகுந்த மகிழ்ச்சி கொள்கிறார்களே அது ஏன்? புலிகளின் கட்டுப்பாட்டில் வாழும் பகுதிகளிலிருந்து அரச படைகளின் கட்டுப்பாட்டிலுள்ள பகுதிகளிற்கு போய்வர தமிழ் மக்கள் எதற்காக பிணை காட்டவேண்டும்? உத்தரவாதம் காட்ட வேண்டும்? தங்கள் கட்டுபாட்டில் இருக்கும் தமிழர்கள் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்கு போனால் சிலவேளை திரும்பிவரமாட்டார்கள் என்றுதானே புலிகள் சந்தேகம் கொள்கிறார்கள்? அது ஏன்?

1990ம் ஆண்டு இந்திய அமைதிப்படையும் போய், ஈ.பி.ஆர்.எல்.எவ் இன் ஆட்சியிலிருந்த வடக்கு கிழக்கு மாகாணசபையும் கலைக்கப்பட்டுவிட்டால் தமது புலிக்கொடி திருகோணமலையின் மணிக்கூட்டுக் கோபுரத்திலும், பிரடறிக் கோட்டையிலும் பறக்கும் என்ற புலிகள் எல்லா இடத்தையும் விட்டோடி கடைசியாக யாழ்ப்பாணம் மணிக்கூட்டுக்கோபுரத்தில் தான் கொடி விட்டார்கள்.

புலிகள் யாழ்ப்பாணத்தை ஐந்தாண்டுகள் எப்படி ஆண்டார் என்பதை நான் உனக்கு விபரிக்க வேண்டிய அவசியமில்லை.

1995ம் ஆண்டு இறுதியில் யாழ்ப்பாணத்தை இராணுவம் கைப்பற்றப்போகின்றது என்பதைப் புலிகளின் தலைமை முன் கூட்டியே அறிந்திருந்தது. தாங்கள் வன்னிக்காட்டை நோக்கி ஓடுவதைத் தவிரவேறு வழியில்லை என்பதை அறிந்து அதற்கான முன் தயாரிப்புக்களையும் புலிகள் முன் கூட்டியே செய்யத்தொடங்கியிருந்தனர்.

இருப்பினும் தாங்கள் யாழ்ப்பாணத்தை விட்டோடுவதற்கு முதலிலும் தாயக பாதுகாப்பு நிதி' என்ற பெயரில் யாழ்ப்பாணத் தமிழர்களிடமிருந்து தங்க நகைகளையெல்லாம் சுருட்டிக்கொண்டிருந்தார்கள், வெளிநாடுகளில் வாழும் தமிழர்களிடமிருந்து '1000 கோடி ரூபாய் நிதிதிரட்டும் திட்டம்' என்ற பெயரில் பெருந்தொகையை திரட்டினர்.

ஆனால் இராணுவம் 'ஒப்பரேசன் ரிவிரச' என்ற பெயரில் முன்னேறிவருவதை சாட்டாக வைத்து அணைவரையும் வெளியேற்றிவிட்டு, பின்னால் தமது வாகனங்களில் பொதுமக்களின் வீடுகளிலிருந்த பெறுமதிமிக்க பொருட்களை யெல்லாம் சூறையாடி தமது வாகனங்களில் ஏற்றிச் சென்று மீண்டும் அதே தமிழ் மக்களுக்கு அப்பொருட்களில் சிலவற்றை ஏலம்போட்டு விற்றவர்களல்லவா?

தமிழ் மக்களின் இந்த 'இடம் பெயர்வுத் துன்பம்' என்பது வரலாற்றில் மறக்க முடியாத நிகழ்சியல்லவா? அந்த சந்தர்ப்பத்தில் புலிகள் எவ்வாறு நடந்து கொண்டார்கள்? தமிழ் மக்களின் பாதுகாவலர்களாகவா? இல்லையே!

சிங்கள ஆட்சியாளர்கள் மீதும் சிங்கள இராணுவத்தினர் மீதும் தமிழ் மக்களுக்கு ஆத்திரம் உண்டு என்பதில் சந்தேகமில்லை. ஆனால் எந்த ஒரு தமிழனும் மீண்டும் புலிகளின் ஆட்சி எந்தவொரு துண்டு நிலத்திலும் ஏற்படுவதை விரும்பவில்லை.

ஆயுதம் தாங்கிய எவரைக்கண்டாலும் தமிழ் மக்கள் அஞ்சுகின்றார்கள் வெறுக்கிறார்கள் என்றால் அதற்கு காரணம் புலிகள் அல்லவா?

புலிகளுக்கு கிடைத்தளவு ஆயுதங்களும் வேறு பல வாய்ப்புக்களும் உலகின் எந்தவொரு விடுதலை இயக்கத்திற்கும் வரலாற்றின் எந்தச் சந்தர்ப்பத்திலும் கிடைத்தது கிடையாது. ஆனால் சாதித்தது என்ன? பட்டியல் போட்டுக் காட்ட வேண்டிய அவசியமில்லை.

தமிழ்மக்கள் நியாயமான அதிகாரங்களுடன் வாழக்கூடிய மாநில சுயாட்சியையும் சமாதானமான வாழ்வையும் புலிகள் ஏற்க மாட்டார்கள் ஏனென்றால் அது புலிகளின் எதேச்சாதிகார ஆசைகளுக்கு இடமளிக்காது. அதேவேளை புலிகளின் தாகமான தமிழிழத்தையும் அவர்களால் பெறமுடியாது. அதைத்தான் நாளாந்தம் பார்க்கிறோமே!

நண்பனே! இனியும் உன்னை நீ ஏமாற்றாதே! அல்லது ஏமறாதே! மற்றவர்களை நீ ஏமாற்றுவதைக் தெரிந்து கொள்ளாமல் உன்னை நீ தொடர்ந்தும் ஏமாற்றிக் கொண்டிருப்பாயானால் உனது முகத்திரையை நீயே கிழித்துக் கொள்ளும் நாளும் வெகுதூரத்தில்லை.

உண்மையை நீண்ட நாட்கள் மறக்கமுடியாது உண்மையை நீண்ட நாட்கள் மறைக்க முடியாது உண்மையை நீ கண்டுகொள்ளத் தவறினால் உண்மை உன்னை உனக்கும் மற்றவர்களுக்கும் அடையாளம் காட்டுவது தவிர்க்கமுடியாததாகும். இது சுடலை வேதமுமல்ல. நான் புதிதாகக் கூறும் ஒரு விடயமும்லல.

குற்றம் செய்பவன் மட்டுமல்ல குற்றம் செய்வதற்கு துணை செய்பவனும் குற்றவாளியே! அழிந்து கொண்டிருக்கும் தமிழ் மக்களுக்கு ஏதாவதுதொரு சிறு நன்மையாவத செய்ய விரும்பினால், புலிகளை எதிர்க்க உன்னால் முடியா விட்டாலும் பரவாயில்லை தயவு செய்து புலிகளை ஆதரிக்கும் உனது அறியாமையையாவது இன்றோடு போக்கிக்கொள்.

க. மணியம்
ஜெர்மனி

# சோலமன் பதில்கள்

**எதிர்வரும் ஆண்டு தேர்தல் ஆண்டாக இருப்பதால், ஜனாதிபதித் தேர்தலா-பாராளுமன்றத் தேர்தலா முதலில் வரும்? அதற்கான காரணம் என்ன?**

*க. சண்முகநாதன், கொழும்பு-06.*

ஜனாதிபதித் தேர்தல் நடாத்துவதற்கான சாத்தியக் கூறுகளே அதிகமாக உள்ளன. நடந்து முடிந்த மாகாணசபைத் தேர்தலில் ஆளும் மக்கள் முன்னணிக்கு கிடைத்த வாக்குகள் கடந்த பாராளுமன்ற ஜனாதிபதித் தேர்தல்களில் கிடைத்ததிலும் விடக்குறைவானதே. மாகாணசபைகள் அனைத்திலும் வென்றாலும் இரண்டு இடங்களைத் தவிர மற்ற எங்கும் அறுதிப் பெரும்பான்மை கிடைக்கவில்லை. இந்நிலையில் பாராளுமன்றத் தேர்தலில் தோல்வி அடைந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை என்பதாலும், ஐ.தே.க தலைவர் ரணில் விக்ரமசிங்கவுடன் போட்டி எனும் போது, அவரிலும் விட தான் பிரபல்யமான, மக்களால் விரும்பப்படும் ஓர் வேட்பாளர் என நினைப்பதாலும், ஜனாதிபதித் தேர்தலில் வென்றால், அதனை வைத்து சுலபமாக பாராளுமன்றத் தேர்தலில் வென்று விடலாம் என்றே ஜனாதிபதி கருதவதாகத் தோன்றுகின்றது. சுருக்கமாக ரணிலின் பலவீனத்தை தனது பலமாக கருதி போட்டியில் குதிப்பார் என்றே தோன்றுகின்றது.

**தமிழர்களின் உரிமைப் போராட்டத்தில் உருவான மாகாணசபைகள் இன்று சிங்களவர்களின் நலன்களை பாதுகாக்கும் நிறுவனமான மாறியிருப்பது ஏன்?**

*ஆர். சுப்பிரமணியம், திருகோணமலை.*

வடகிழக்கில் 1989இல் மாகாணசபை ஒன்று உருவாக்கப்பட்டது. தமிழர்களின் விடாமுயற்சியான போராட்டமும், இந்திய அரசின் தலையீடும் அம்மாகாண சபை உருவாகக் காரணமாக இருந்தது. ஆனால் புலிகளின் தவறான அணுகுமுறையால், அம்மாகாணசபை பிரேமதாசா அரசால் கலைக்கப்பட்டதுடன் மீண்டும் யுத்தம் ஆரம்பமானது. ஆனால் அவ்யுத்தம் முடிவில்லாமல் தொடர்வதால் வட-கிழக்கு மாகாணசபைக்கான தேர்தல் தொடர்ந்து ஒத்திவைக்கப்பட்டே வருகின்றது. அச்சபையில் தேர்ந்தெடுக்கப்பட்ட தமிழர்களின் பிரதிநிதித்துவம் இல்லாததால், சிறீலங்கா அரசின் நேரடிக்கட்டுப்பாட்டிற்குள்ளேயே இருந்து வருகின்றது. ஆனால் அதே சமயம் ஏனைய மாகாணகளுக்கு தொடர்ச்சியான தேர்தல்கள் நடப்பதால், அச்சபைகள் சுயாதீனமாக இயங்குவதுடன், தமது மாகாண மக்களுக்கு சேவை செய்யக்கூடியதாகவும் உள்ளது.

**தென்னிலங்கையில் நடைபெறும் கொலை-கொள்ளை-கற்பழிப்பு போன்ற குற்றச் செயல்களில் தப்பிஓடிவந்த படைவீரர்கள் சம்பந்தப்பட்டிருப்பத எதைக் காட்டுகிறது?**

*மு. முருகுப்பிள்ளை, வவுனியா.*

தென்னிலங்கையில் நடைபெறும், கொலை, கொள்ளை, கற்பழிப்பில் ஏறத்தாழ 25வீதமானவை படையணியில் இருந்து தப்பியோடியவர்களாலேயே நடைபெறுவதாக ஆய்வொன்று தெரிவிக்கின்றது. படையணிகளுக்கு ஆள் தேவை என்ற ஒரே காரணத்தால், இளைஞர்களின் படிப்பு, தகுதி, திறமை என்பன கணிக்கப்படாமலேயே பெருந் தொகையானோர் படையணிகளில் சேர்க்கப்படுகின்றனர். இவர்கள் நல்லதோர் வருமானத்தை எதிர்பார்த்தே படைகளில் இணைந்தனர். ஆனால் யுத்த களத்தில் 24மணி நேரமும் சாவுக்கு மத்தியில் இருப்பதால் எப்படியாவது அதனை விட்டு ஓடிவிடவே பலர் விரும்புகின்றனர். இப்படி ஓடுபவர்கள் தாம் படைகளில் பெற்ற துப்பாக்கிப் பயிற்சியையும் தமக்கு சாதகமாகப் பயன்படுத்தி சமூகவிரோத செயல்களில் ஈடுபடுகின்றார்கள். இப்படி ஓடிவருபவர்களுக்கு வேறு வேலைகள் கொடுக்கப்படக்கூடாது என்ற அரசின் உத்தரவும், இராணுவம் இவர்களை மீண்டும் கைது செய்து யுத்த முனைக்கு அனுப்ப முயற்சிப்பதாலும், அவர்கள் தலை மறைவு வாழ்க்கைக்கே தள்ளப்படுகின்றனர். இப்படியான சூழல்களும், படிப்பறிவு, தகுதி அற்றிற்றிருப்பதும் கூட இவர்களை சமூக விரோதிகளாக மாற்றுகின்றது என்றே கூறலாம்.

**பேச்சுவார்த்தைக்கு பிரபாகரன் நம்பத்தகுந்த ஆள் இல்லை என்று குற்றம் சாட்டும் ஜனாதிபதி சந்திரிகா அவர்கள் இனப்பிரச்சினையில் எந்தளவுக்கு நம்பகத்தனமாக நடந்து கொண்டிருக்கிறார்?**

*த. கதிரவேலு, யாழ்ப்பாணம்.*

தமிழீழ விடுதலைப் புலிகள் இந்திய அரசுடனும், பிரேமதாசாவுடனும், இறுதியில் சந்திரிகாவுடனும், பேச்சுவார்த்தை நடாத்திய பின்னர் தாமே யுத்த நிறுத்தத்தை முறித்து மீண்டும் யுத்தத்தை ஆரம்பித்ததே தமது வரலாறாக உள்ளது இந்நிலையில் பேச்சுவார்த்தையில் தனக்கு நம்பிக்கை உண்டு என்பதை நிரூபிக்க வேண்டிய தேவையும் கடமையும் பிரபாகரனுக்கு உள்ளது. அதே சமயம் சமாதானத் தீர்வொன்றின் மூலம் பிரச்சினையைத் தீர்ப்பேன் எனக்கூறி பதவிக்கு வந்த சந்திரிகா அவர்கள் யுத்தத்தினை வெல்வதன் மூலம் தான் சமாதானம் எனக்கூறி யுத்தத்தை தீவிரப்படுத்தியுள்ளதானது, அவர் சமாதானத்தின் மீது நம்பிக்கையுள்ளவரா என்ற கேள்வியையும் உருவாக்கியுள்ளது. மொத்தத்தில் இரு பகுதியினருக்கும் உண்மையான பேச்சுவார்த்தை ஒன்றில் ஈடுபடுவதன் மூலமே அவர்களின் நம்பகத் தன்மை வெளிப்படும்.

**20வருடங்கள் தாண்டி - தொடர்ந்து கொண்டிருக்கும் இந்த ஆயுதப்போராட்டம், விடுதலைப்புலிகள் நினைக்கும் தமிழ் ஈழத்தை பெற்றுத்தருமா?**

*ஆர். கந்தசாமி, கோவிற்குளம்.*

நாம் எல்லோருமே தனிநாடே எமது பிரச்சினைக்கு தீர்வாகுமென்று நம்பியே ஆயுதப் போராட்டத்தில் குதித்தோம். ஆனால் புலிகளின் சர்வாதிகாரப்போக்காலும், தாம் மாத்திரமே தமிழ் மக்களுக்குப் போராடத் தகுதியானவர்கள் எனக் கருதி ஏனைய இயக்கங்களை உயிருடனேயே கொளுத்தியும், சுட்டும் அழித்தொழிக்க நினைத்ததால், தமிழ்க்கட்சிகளிடையே ஐக்கியம் என்பது இல்லாமல் போனது. அது இன்றும் கூட தொடர்கதையாகவே உள்ளது. இது தவிர இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியை கொலை செய்ததும், முஸ்லீம் மக்களை வடக்கில் இருந்து விரட்டியதும் எல்லாம் இணைந்து புலிகளின் போராட்டம் பயங்கரவாதப் போராட்டமாகவே சர்வதேச ரீதியாக பார்க்கப்படுகின்றது. எனவே எமது போராட்டம் தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டம் என்ற அடிப்படையில் ஒரு நாட்டின் ஆதரவைக்கூடப் பெற்றுக்கொள்ளத் தவறியதையும், எமக்கு ஆதரவளித்த இந்தியாவை நாம் பகைத்து எமது எதிரியாக்கிக்கொண்டதையும் நாம் புரிந்துகொள்ளவேண்டும். இந்நிலையில் தனிநாடு என்பது சாத்தியமில்லை என்பது பிரபாகரனுக்கும் புரியும். ஆனாலும் தமிழீழத்தை கைவிட்டால் வரலாறு தன்னைத் துரோகி என்று கூறிவிடும் என்பதினாலேயே வெல்லப் படமுடியாத ஓர் அநாவசிய யுத்தத்தை நடாத்திவருகின்றார்.

**விடுதலைப்புலிகள் இராணுவரீதியில் பலவீனப்பட்டால்-தமிழர்களின் உரிமை போராட்டம் நசுக்கப்பட்டு-பேரம் பேசும் தகுதியை அவர்கள் இழந்துவிடுவார்கள்-இதில் உண்மை இருக்கிறதா?**

*பீ. அலெக்சாண்டர், பேசாலை.*


புலிகள் இராணுவரீதியில் பலவீனப்படுத்தப்பட்டால் தமிழ் மக்களின் பேரம் பேசும் ஆற்றல் குறைவடையும் என்பது உண்மையே. ஆனால் புலிகள் அரசியல், இராணுவ ரீதியாக எடுக்கும் தவறான அணுகுமுறைகளானது, புலிகளை இராணுவரீதியில் பலவீனப்படுத்தி வருகின்றது என்பதே நிதர்சனமானது. இந்திய இராணுவம் வெளியேறிய பின் வட-கிழக்கை தமது கட்டுப்பாட்டில் வைத்திருந்த புலிகள், தமழ் மக்களுக்கான அதி உயர் உரிமைகளை வென்றெடுத்திருக்க முடியும். ஆனால் தொடங்கப்பட்ட அநாவசிய யுத்தத்தால் கிழக்கை இழந்தனர். பின்னர் சந்திரிகாவுடன் பேச்சு வார்த்தை முறிந்து யுத்தம் தொடங்கப்பட்டதால் யாழ்குடா நாட்டை இழந்து வவுனியர், மன்னாரையும் இழந்து இன்று கிளிநொச்சி, முல்லைத்தீவே மீதமாக உள்ளது. அதாவது 1980களில் போராட்டம் தொடங்கிய காலகட்டத்துக்கு நாம் மீண்டும் போயுள்ளோம் இந்நிலையில் புலிகள் இராணுவ ரீதியில் பலவீனமாகிப்போகின்றார்கள் என்பது உண்மையே.

அரசுக்கெதிரான மக்கள் போராட்டத்தை முன்னெடுப்பதே இதற்கான மாற்று வழியாகும். ஆனால் புலிகள் சர்வாதிகாரச் செயற்பாடுகளும், ஜனநாயக விரோதச் செயற்பாடுகளும், மக்களை இன்னும் அச்சத்துக்குள்ளேயே வைத்துள்ளது. எனவே தமிழ் மக்களின் பேரம் பேசும் திறன் தக்கவைத்துக்கொள்ளப்பட வேண்டுமாயின், போராட்டம் ஜனநாயக வழிமுறையிலான சாத்வீகப் போராட்டமாக, மக்கள் போராட்டமாக மாற்றப்படவேண்டும். இல்லையேல் எமது மக்களின் தியாகங்களும், கஷ்டங்களும் விழலுக்கிறைத்த நீராவதுடன், எமது மக்களுக்கு நாம் துரோகம் செய்தவர்களாவோம்.

**இன்றைய காலகட்டத்தில் ஜனநாயகப் போராட்டங்கள் தேவையென்று நீங்கள் சொல்கிறீர்கள். அந்தளவுக்கு மற்ற தமிழ்க் கட்சிகள் ஆர்வம் காட்டுவதாகத் தெரியவில்லையே! ஏன்?**

*எம். திருநாவுக்கரசு, மட்டக்களப்பு.*

ஜனநாயகப் போராட்டத்தின் அவசியங்களை நிற்ச்சயமாக ஏனைய தமிழ் இயக்கத்தவர்கள் புரிந்து கொள்கின்றார்கள். ஆனால் இயக்கங்களுக்கிடையில் ஏற்படும் மோதல்களும், தேர்தல்களும், பாராளுமன்றமும் பிரச்சினைகளைத்தீர்க்கப் போதுமான இடங்களாகக் கருதுவதால் தனித்துப் போனால் கூடுதலான ஆசனங்களைப் பிடிக்கலாமே, கூட்டாகப் போய் நாம் ஏன் மற்றவர்களின் ஊத்தைகளையும் சுமக்க வேண்டுமெனக் கருதவதாலும், தமக்கென தனித்தனி வேலைத்திட்டங்களும், கொள்கைகளும் இருப்பதால் தமிழ் இயக்கங்கள் இணைந்த போகமுடியாதெனக் கருதுகின்றார்கள். பாராளுமன்றத்தில் அதிக ஆசனங்களைக்கொண்டுள்ள ஈ.பி.டி.பி யாக இருந்தாலும் சரி கூட்டணியாக இருந்தாலும் சரி வாயளவிலேயே அவர்களது ஐக்கியம் இருக்கின்றதே தவிர இணைந்து செயற்பட்டு அரசுக்கு அழுத்தம் கொடுக்க முன்வருவதில்லை. தமிழ்க் கட்சிகளை கூட்டாகவும், தனியாகவும் சந்திக்கும் எந்த வெளிநாட்டு பிரமுகரும் ஐக்கியத்தைப்பற்றியே வலியுறுத்தினாலும் எம்மவர்களுக்கு அது உறைப்பதில்லை. ●




### சீ.... சீ..... இந்தப்பழம் புளிக்கும்

பிரபாகரனுடன் மட்டுமே பேசப்போகிறேன் என்று புதுசா ஒருவர் கிளம்பியிருக்கிறார். அவர்தான் வர்த்தகர் லலித்கொத்தலாவல. தமிழர் பிரச்சினையை தீர்க்கப் புறப்பட்டு எல்லாரும் களைத்துப்போட்டினம். இப்போ புதுசா இவர் முளைத்திருக்கிறார். பிரபாகரனை சந்திக்கப்போகும் இவரின் நினைப்பைப் பார்த்தால் சிரிப்புத்தான் வருகிறது. எதற்கும் இவரின் நினைப்பு பிழைப்பைக்கெடுக்காம இருந்தாசரி எல்லாரும் எறின குதிரையில் சங்கடத்தாரும்...

### ஏமாற்றாதே ஏமாறாதே

ஐக்கிய முன்னணி ஆட்சிக்கு வந்து ஐந்தாண்டுகள் முடிந்துவிட்டது. வரப்போவது தேர்தலாண்டு முதலில் தமிழர் பிரச்சினையை தீர்க்கப் போகிறோம் என்று தீர்வுப்பொதியை தூசு தட்டத்தொடங்கி இருக்கினம். தாமதத்திற்கு எதிர்க்கட்சி மீது பழியைப் போட்டு தப்பிக்க பார்க்கினம். தமிழ் மக்களை சரிக்கட்டுவதற்காக இப்ப வந்த அக்கறை அப்போ எங்கு போச்சுது. காலம் காலமாக ஏமாற்றுப்பட்டு வந்த தமிழ் மக்கள் இனிமேலும் ஏமாறமாட்டார்கள். தந்தை ஏமாற்றி- தாய் ஏமாற்றி-இப்போ மகளும் ஏமாற்றுகிறார். இது அவர்களுக்கு பரம்பரை வியாதி.

### கொம்புந்தேனுக்கு-ஆசை

அரசும்-புலிகளும் பேசப் போகிறார்கள். மறு அவதாரம் எடுத்த தலைவர் தலைமையில் வட-கிழக்குக்கு இடைக்கால நிர்வாகம் வரப்போகிறது-என்று காத்து வாக்கில் செய்திகள் அடிபடுது. இது உண்மையோ பொய்யோ யாம் அறியோம். இருந்தாலும் குளிர்மையான செய்திகள் தான். முன்னது நடக்காட்டிலும் பின்னத நடந்தாலும் நடக்கும். இது குருவி தலையில் தேங்காயா? அல்லது கொக்கு தலையில் வெண்ணையா? பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

### சோறா சுதந்திமா!

பொருளாதார சமன்பாடு என்பது ஒரு சோஷலிசக் கோட்பாடு. ஏழை-பணக்காரன் என்ற வித்தியாசம் இல்லாத ஒரு சமூதாயத்தை உருவாக்குவது. இதைப் பிரபாகரன் எப்படிப் புரிந்து கொண்டாரோ தெரியவில்லை அவர் புதுவிதமான சோஷலிசத்தை உருவாக்கியுள்ளார். அவரின் தமிழ் ஈழப் போராட்டத்தால் ஏழையை பரம ஏழையாகவும், பணக்காரனை பரதேசியாவும் ஒரே வரிசையில் நிற்கவைத்து நிவாரணம் வாங்க வைத்திருக்கிறார். தமிழ் ஈழத்தை காட்டுவாரோ இல்லையோ வட-கிழக்கில் வாழும் தமிழர்களை வறுமைக்கோட்டுக்கு கீழே அழைத்துச் சென்று புதிய சோஷலிசக்கோட்பாட்டை பிரபாகரன் காட்டுவார்.

### இழப்பதற்கு எதுவுமில்லை-உயிரைத்தவிர

சாறம்-பெனியன்-துண்டு தடை செய்யப்பட்ட பொருளாக போச்சு யாழ்ப்பாணம் குருநகரில். மீன்பிடித் தொழிலாளர் கோவணத்துடன் கடலுக்கு போகவேண்டுமாம். ஆமிக்காரர்கள் சொல்லி இருக்கிறார்கள். எந்தக் காலத்தில் இருக்கிறோம். எந்த உலகத்தில் வாழ்கிறோம். இந்த அநியாயத்தை கேட்க. ஒரு கேள்வி கடலுக்கு போக, வீட்டில் இருந்து கோவணத்துடன் புறப்படவேணுமா? ஆமிக்காம்பில் இருந்து புறப்பட வேணுமா? கொஞ்சம் விபரமாக சொல்லியிருக்கக்கூடாதோ! நல்ல வேளை தப்பினார்கள். அம்மணத்துடன் போய் மீன்பிடிக்கச் சொல்லவில்லை!

### செவிடன் காதில ஊதின சங்கு

புலிகளால் மரணதண்டனை விதிக்கப்பட்ட அரசியல் தலைவர்கள் நகர-பிரதேச சபை உறுப்பினர்கள் ஒருவர்பின் ஒருவராக போட்டுத்தள்ளப்படகிறார்கள். கடைசியா தமிழர் விடுதலைக்கூட்டணியின் எம்.பி. திரு. நீலன் அவர்கள் கொலையாளியால் கொல்லப்பட்டிருக்கிறார். இன்னும் நேரடியாக புலிகளை கண்டிக்க கூட்டணியினர் தயங்குகின்றனர். ஏதோ வெடிகுண்டு-தானாகவே துள்ளித்துள்ளி வந்து நீலனை கொன்றதாக நினைக்கிறார்கள் அந்தளவுக்கு கூட்டணியினர் தடுமாறுகின்றனர். இதிலிருந்து என்ன தெரிகிறது. புலிகள், சுட்டுச்சுட்டு தமிழ்க்கட்சிகளை ஒற்றுமைப்படுத்த நினைத்தாலும் கூட்டணியினர் மசியமாட்டினம் போலல்லோ இருக்கு குறைந்தது- கொலைகளை தடுப்பதற்காகவது. ஒன்றுபட்டால்- உண்டு வாழ்வு.

# இதய அஞ்சலி



புளொட் அமைப்பின் யாழ் தலைமையகத்தில் 26-07-99ல் காலம் சென்ற செ. கிருபைராஜாவின் அஞ்சலி நிகழ்வில் கலந்து கொண்ட மத்திய குழு உறுப்பினர் தோழர் சுபந்திரன் உரையிலிருந்து

தமிழரசுக் கட்சிக் காலத்தில் அரசியலில் பிரவேசித்து இடதுசாரிக் கருத்துக்களினால் ஈர்க்கப்பட்டு ஆயுதம் ஏந்திய போராட்டம் ஆரம்பித்த காலத்தில் புளொட் அமைப்பில் இணைந்து விடுதலைப் போராட்டத்தை முன்னெடுத்தவர் கிருபைராஜா.

கொலை அச்சுறுத்தல்களுக்கு மத்தியிலும் மக்களுக்கு செய்ய வேண்டிய கடமையில் பின்வாங்காது செய்துகொண்டிருந்தார் அவர். கிருபா மாஸ்டரின் பாதை விசாலமானது. கட்சி அரசியலுக்கு அப்பாற்பட்டது.

யாழ். பிராந்தியத்தில் ஏனைய கட்சிகளுடன் இணைந்து மனித நீதிக்கான குழு என்ற பெயரில் ஸ்தாபன ரீதியில் பல நடவடிக்கைகளை முன்னெடுத்தார்.

யாழ். மாநகர சபையில் உறுப்பினராகப் பதவியேற்றதன் பின்னர் கட்சிபேதமின்றி சபையின் நடவடிக்கைகளை முன்னெடுப்பதில் உதவியாக இருந்தவர்.

மாநகர சபையில் ஆற்றல் மிக்க பேச்சாளராக இருந்து சபையை வழிநடத்தியவர். சபையில் எந்த விடயம் எடுக்கப்பட்டாலும் அதில் தனது ஆழமான கருத்துக்களைத் தெரிவித்து ஆலோசனைகளை வழங்கிவந்தார்.

எங்கள் எல்லோருக்கும் நல்ல நண்பனாக, சகோதரனாக, உற்ற தோழனாக இருந்தவர். அவருடைய இழப்பு தமிழ் சமூகத்துக்கு ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும். ●

# தகவல் சுதந்திரத்தின் மீதான அச்சுறுத்தல்

உதயன் பத்திரிகைக் காரியாலயத்தின் மீது மேற்கொள்ளப்பட்ட கைக்குண்டுத்தாக்குதலை ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி வன்மையாகக் கண்டிக்கிறது.

பத்திரிகை, நூல் நிலையம், புத்திஜீவிகள் மீதான தாக்குதல் படித்தவர்களைப் பெருந்தொகையாகக் கொண்ட எமது சமூகத்தில் இவை பேரதிர்ச்சியூட்டும் சம்பவங்களாகவே இருக்கின்றன.

1981இல் நூல் நிலையம் எரிக்கப்பட்டது ஒரு கலாச்சாரப் படுகொலையென வர்ணிக்கப்பட்டது அடுத்த ஈழநாட்டுப்பத்திரிகைக் காரியாலயம் எரிக்கப்பட்டது. இவை பேரினவாதத்தின் திட்டமிட்ட கொடூரச் செயல்களாகவே இருந்தன. தமிழ்மக்கள் மனதில் ஆழமான பாதிப்பை ஏற்படுத்தியவை இச்சம்வங்கள்.

அடுத்து புலிகள் மாற்றுக்கருத்துக்கள் கொள்கைகள் கொண்ட அரசியல் சக்திகள் புத்திஜீவிகள் மீது தாக்குதல் மேற்கொண்டனர். அவர்கள் விமர்ச்சிக்கப்பட்டதற்காக ரஜனி திரணகம படுகொலை செய்யப்பட்டார்.

1986ம் ஆண்டு முழுவதும் நடைபெற்ற இயக்க அழிப்பு வேலைகளும் இந்த அடிப்படையிலேயே நடைபெற்றன. திரைப்படங்கள், இந்திய சஞ்சிகைகள், தடை செய்யப்பட்டன.

ஊடகத்துறையில் பணியாற்றியவர்கள் ஜனநாயக விரோத சக்திகளை விமர்சித்ததற்காக காணாமல் போயிருக்கிறார்கள்.


இன்று யாழ்ப்பாணத்து மக்களின் பிரச்சினைகளை வெளிக் கொண்டு வருவதற்கு உள்ளூரில் உள்ள ஒரே ஒரு ஊடகமாக உதயனே செயற்பட்டுக்கொண்டிருக்கிறது.

நாட்டின் ஏனைய பகுதிகளிலிருந்து துண்டாடப்பட்டிருக்கும் யாழ்ப்பாணத்திற்கு அது ஒரு அத்தியவசிய தொடர்புச்சாதனமாகவே இருந்தது.

இந்த செயலில் ஈடுபட்டவர்கள் யாராக இருந்தாலும் அவர்கள் அம்பலப்படுத்தப்படவேண்டும். யார் செய்தார்கள் என்பதைச் சொல்வதே இன்று எமது சமூகத்தில் தீராத வியாதி, அது நீலன் படுகொலையில் இருந்து உதயன் பத்திரிகை மீதான கைக்குண்டுத் தாக்குதல் வரை ஒரே மாதிரியாகத்தான் இருக்கிறது.

பாதிக்கப்பட்ட உதயன் பத்திரிகையாளர் குடும்பத்திற்கு எமது உறுதியான ஆதரவைத் தெரிவித்துக்கொள்கிறோம். ●

# குறுக்கெழுத்துப் போட்டி-45



### இடமிருந்து வலம்

1. புலிகளின் படுகொலைத் தொடரில் சமீபத்துப் பலி.
8. வாருங்கள்!
9. பாதுகாப்புக்கு உள்ளது. இதுவே பயிரை மேய்ந்துவிடக் கூடாது. (தலைகீழ்)
10. பாடலின் ஆரம்பம்.
11. மேலே குறிப்பிட்டது எவ்வாறு என்றால்....
13. பயிர்களுக்குள் வளரும் புல்; அகற்றுதலும் இதுதான்.
14. பண்டைய விவசாயத் தொழிலில் நீரிறைக்கப் பயன்பட்ட சாதனம்.
17. புனிதப் பயணம்.
18. வானம் பொழிகிறது பூமி விளைகிறது இது ஏன் உனக்குத் தரவேண்டும் என்று வெள்ளையர்களிடம் கட்டபொம்மன் கேட்டது.
19. ஆதார அடையாளம் இங்கே குழம்பிக் கிடக்கிறது.
21. வலதுக்கு எதிர்.
22. கிழிந்த துணி.
23. துறவிகளின் ஆடை.
25. வடமராட்சியில் ஓர் ஊர்.
26. சுருதி சேர்ப்பதற்கான தந்தி வாத்தியம்.
29. ஒன்றுடன் ஒன்று மெல்லத் தேய்த்தல். (குழம்பி)
31. செய்து முடிப்பதற்கு தயாரிக்கப்படும் ஏற்பாடு.
33. பூசும் மருந்தாகப் பயன்படும் களிம்பு.
34. ஆறு பக்கங்களை உடைய சூதாட்டக் காய். (தலைகீழ்)

### மேலிருந்து கீழ்

1. செம்மணிப் புதைகுழி விசாரணைகளை மேற்கொள்ளும் இளஞ்செழியன் பதவி.
2. இருபால் மாணவரும் சேர்ந்து படிக்கும் பாடசாலைக்கு அடைமொழியாகச் சொல்வது. (தலைகீழ்)
3. சிவபெருமான் புரிந்ததாகச் சொல்லப்படுவது; சிவாஜி கணேசன் நடித்தது.
4. ஆரம்ப உயிர். (தலைகீழ்)
5. சேற்றினில் மலரும் அழகு.
6. விதியைச் சக்தி வாய்ந்தது என்று குறிக்கச் சொல்வது.
7. மருத்துவ நிழல் தரும் மரம் கடைசி எழுத்தின்றி. (தலைகீழ்)
11. சொந்த இடமிழந்தவர்கள் தஞ்சமடைந்து வாழுமிடம்.
12. மீன்களை உள்ளே பிடிக்கவும், நுளம்பை வெளியே தடுக்கவும்.
15. கூன் குருடு செவிடு நீங்கிப் பிறத்தல் பற்றி அவ்வை சொன்னது.
16. பொறி.
18. இளம் பனை. இது வளர்த்துக் கள்ளுக் குடிப்பவர்களும் இருக்கிறார்கள்.
19. செய்தி.
20. வரலாறு. (தலைகீழ்)
24. திருநீறு.
27. நூல் சுற்றப் பயன்படும் கருவி. இதில் நூல் நூற்று, அதில் ஆடை நெய்து உதாரண புருஷராய் வாழ்ந்தவர் காந்தி.
28. ஒரு தோல் வாத்தியம். (தலைகீழ்)
30. கவுண்டமணி செந்திலுக்குக் கொடுப்பது.
32. தாண்டிச்செல். (தலைகீழ்)

### குறுக்கெழுத்துப் போட்டி-44 விடைகள்:

| இடமிருந்து வலம்: | | மேலிருந்து கீழ்: | |
|---|---|---|---|
| 1. புதைகுழி | | 1. புங்குடுதீவு | |
| 4. துப்பாக்கி | | 2. குசலம் | |
| 8. விரசம் | | 3. பங்கயவிழி | |
| 10. தகும் | | 4. தும் | |
| 11. குவலயம் | | 5. பாதம் | |
| 12. நளபாகம் | | 6. குக் | |
| 14. புள(கம்) | | 7. கிம்பளம் | |
| 15. தீது | | 9. ரம்பா | |
| 17. டமாரம் | | 13. நடப்பு | |
| 19. பகிர்வு | | 14. புரளி | |
| 21. பப்பாளி | | 16. துர்நாற்றம் | |
| 22. நாழி | | 18. பாமா | |
| 23. மரபு | | 20. கிழிசல் | |
| 25. தற்சமயம் | | 21. பரம்பரை | |
| 26. மமதை | | 23. மயந்தி | |
| 28. விறல் | | 24. விதை | |
| 29. பந்தயம் | 31. குதிரை | 25. தவிடு | |
| 30. டும் | 32. குன்று | 26. மதகு | 27. மயன் |

**சரியான விடை எழுதி ரூபா 100 பரிசாகப் பெறும் அதிர்ஷ்டசாலி:**

பி. லோஜினி
ஆனந்தொலை தொடர்புநிலையம்,
திருநாவற்குளம், தாண்டிக்குளம்.

**பாராட்டுப் பெறத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஐந்து பேர்கள் வருமாறு:**

1. யூ.எல்.எம். காலித்
இல;153, ஏகாம்பரம் வீதி, திருமலை.
2. செல்வி.கு. துஷிதா
இல;04, குட்செட் ரோட், வவுனியா.
3. பா. பாலேஸ்வரன்
பள்ளிமுனை வீதி, மன்னார்.
4. மா. செல்லத்துரை
474, மின்சார நிலையவீதி, திருமலை.
5. அஹியார், பஸ்னா
புதுக்குடியிருப்பு, பதுளுஓயா.

**விடைகளை மட்டும் தனியாக ஒரு தபாலட்டையில் எழுதி எதிர்வரும் 30ந் திகதிக்கு முன் அனுப்பி வையுங்கள்.**

**புதிய கண்ணோட்டம்
த.பெ.இல: 442
கொழும்பு**

# 1983 யூலை இனப்.........

4ம் பக்கம் தொடர்ச்சி

பாராளுமன்ற அங்கத்தவராக இருந்தபோதும் அவர் முழு நேர அரசியல் வாதியாக இருக்கவில்லை. கல்வியாளர்களுடன், சர்வதேச மனித உரிமை அமைப்புக்களுடன், அரசசார்பற்ற மற்றும் மனித உரிமை அமைப்புக்கள் ஏனைய அரசியல் கட்சிகள், பத்திரிகையாளர்களுடன் தனது உறவைப் பேணியவர்.

அரசியல் தலைவர்களையும், உணர்வுள்ள அறிவு ஜீவிகளையும் அழித்தொழித்தல் என்பது இன்று தமிழ் சமூகத்தில் வளர்ந்து விட்ட காட்டுமிராண்டித்தனமாகும். இந்த காட்டுமிராண்டிகள் தமிழ் சமூகத்தில் மொண்ணைகள், அடிமைச் சேவகம் செய்ய தயாரானவர்கள், துதிபாடிகள் மாத்திரமே வாழ வேண்டும் என்று எதிர்பார்க்கிறார்கள்.

ஆனால் இந்த மிகப் பாரதூரமான நிலையை விளங்கிக்கொள்ளாமலேயே தமிழ்ச்சமூகம் அழிந்துகொண்டிருக்கிறது.

நீலனை குரூரமாக படுகொலை செய்ததற்கான விளக்கத்தை இவர்களால் கொடுக்கமுடியுமா? இல்லை தாம் தான் கொலை செய்தோம் என்று மார்-தட்டிச் சொல்ல முடியுமா?

நீலனின் படுகொலை பரவலான கண்டனத்திற்கு உள்ளாகி இருப்பது ஒரு முக்கியமான அம்சமாகும். இந்தப் படுகொலையுடனாவது இந்த தொடர் காட்டுமிராண்டித்தனத்திற்கு முடிவுகண்டுவதற்கான முன்னெடுப்புக்கள் முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

இனங்கள் பற்றிய கற்கைநெறிக்கான மத்திய நிலையத்தின் மூலம் பல கருத்தரங்குகள் நிகழ்த்திய உள்நாட்டு, வெளிநாட்டு பத்திரிகையாளர்கள், அறிஞர்கள் பலர் கடுமையான கண்டனங்களைத் தெரிவித்துள்ளார்கள்.

ஆனால் துரதிஷ்டம் என்னவென்றால் நீலன் சார்ந்திருக்கும் கட்சியான த.வி.கூ அறிக்கையில் படுகொலை செய்தவர்களை கண்டிக்க திராணி அற்று மிண்டி விழுங்கியது இதனையே மிண்டி விழுங்கிக்கொண்டு எவ்வாறுதான் தமிழ் சமூகத்திற்கு தலைமை கொடுக்கப்போகிறார்களோ தெரியாது? அவர்களுடைய அறிக்கையில் புலிகள் என்ற சொல் எங்கும் காணப்படவில்லை.

தமது சொந்தச் சகாக்கள் அடுத்தடுத்து குறிப்பிட்ட பகுதியினரால் படுகொலை செய்யப்படும் போது கூட அவர்களின் நிகழ்ச்சி நிரலில் இருந்து அரசியல் செய்யும் வினோதமான போக்கு இலங்கையில் மாத்திரம்தான் காணப்படுகிறது.

கிழக்கு மாகாணத்தில் இனிமேல் பொதுவேலைகளில் ஈடுபடவேண்டாம் என புலிகள் அறிவுறுத்தியதுடன் மட்டக்களப்பு மாவட்டத்தின் அத்தனை பா.உ களும் புலிகளின் வேண்டுகோளை சிரமேற்கொண்டு கொழும்பு வந்துள்ளார்கள்.

யாழ்ப்பாணத்தில் தொடர்ச்சியாக மாநகர மேயர்கள் படுகொலை செய்யப்பட்ட போது தமிழர் விடுதலைக்கூட்டணி ஓடும் ரயிலின் முன்னால் அடுத்தடுத்து குழந்தைகளை தூக்கி எறிகிறது என்று அமைச்சர் அஷ்ரப் அவர்கள் தெரிவித்திருந்தார். அந்த நியமங்கள் முட்டாள்த்தனமான நடவடிக்கைகள் என்பதுபோலவே அந்த அறிக்கை அமைந்திருந்தது.

எப்போதும் வடகிழக்கில் நடக்கும் சம்பவங்கள் எமது அரசியல் வாதிக்களுக்கு பல்வேறு வியாக்கியானங்களை அளிக்கச் சொல்கின்றன.

கொழும்பில் நடைபெறுபவை மாத்திரம்தான் வாயடைக்க வைக்கின்றன. இப்போது நடைபெற்ற சம்பவங்களுக்காக இருக்கும் பாராளுமன்ற உறுப்பினர்கள்தான் பதவி விலக முடியுமா? அல்லது நீலனின் காலியான இடத்திற்கு கூட்டணிதான் புதியவர்களை நியமிக்காமை இருக்கமுடியுமா?

1983 இனவன்முறை கொழும்பில் பொறளையில்தான் ஆரம்பித்தது என்று கூறுவார்கள். அதாவது 16ஆண்டுகளுக்கு முன்பு தமிழ் மக்களுக்கெதிரான திட்டமிட்ட இனப்படுகொலை சிங்கள இனவெறியர்களால் இங்கே ஆரம்பித்தது. அதே பொறளையில் 16 ஆண்டுகளுக்கு பின் கல்விமானும் சட்டநிபுணரும், அரசியலாளருமான தமிழர் நீலன் தமிழ் பாசிச வெறியர்களால் ஏவப்பட்ட தற்கொலை குண்டுதாரியினால் படுகொலை செய்யப்பட்டார்.

இந்த 16 வருடங்களின் பின் தமிழ் சமூகம் எங்கே நிறுத்தப்பட்டிருக்கிறது என்பதற்கு இதுவே அளவுகோல். ●

# மக்களே! மௌனத்தை கலையுங்கள்!



1990ம் ஆண்டுகளில் பிரேமதாசா தலைமையிலான அரசும்-புலிகளும் உறவாடி பின் அது கசந்து அரசபடையும்-புலிகளும் மோதியதால் மட்டக்களப்பு மக்கள் வாழ்வே சீர்குலைந்தது அகதிகளாயினர்.

தமிழ் அமைப்பில் இணைந்து செயற்பட்ட போராளிகள் மாமாங்கோயில் வீதியிலே கொல்லப்பட்டு எறியப்பட்டார்கள். அப்பாவி மக்கள் காணாமல் போனார்கள் முஸ்லிம்கள் பள்ளிவாசலில் வைத்து படுகொலை செய்யப்பட்டார்கள். இது புலிகளின் போராட்ட வரலாற்றில் சில பக்கங்கள். மட்டுமே... மக்களுக்காக போராடுவதாக கூறிக்கொண்டு துப்பாக்கிகளுடன் அலையும் அவர்களது போக்கு மனித அழிவையும் அவலத்தையும் தோற்றுவித்துள்ளது.

1992இல் மட்டக்களப்பு நகரை அண்டிய பகுதிகளில் புலிகளின் இராணுவ நடவடிக்கைகளை குறைத்து வாகரைக் காட்டுக்குள் தமது நடவடிக்கைகளை முடக்கிக்கொண்டதால் மக்கள் இயல்பு வாழ்வுக்கு திரும்பினர் மக்கள் அமைதியான வாழ்வை நோக்கி நகர்ந்தனர்.

1994இல் சந்திரிகா தலைமையிலான பொதுஜன ஐக்கிய முன்னணி அரசும்-புலிகளும் பேச்சு வார்த்தையில் ஈடுபட்டனர். மக்கள் சுதந்திரமான, நிம்மதியான வாழ்க்கை கிடைக்குமென மிகுந்த உற்சாகத்தோடு இதனை வரவேற்றனர் ஆனால் அமைதியான சூழலை உருவாக்க புலிகள் விரும்பாததால் மீண்டும் அரச படையுடன் யுத்தத்தை தோற்றுவித்தனர்.

மக்கள் எதிர்பார்ப்பு-அபிலாஷைகள் சுக்கு நூறாக தகர்ந்தன. இன்றுவரை முடிவில்லாத போராக அது பெறுமதிமிக்க மனித உயிர்களை அழிக்கும் போராக எல்லையற்று தொடர்கிறது.

இப்போதெல்லாம் மட்டக்களப்பு நகரம் மீண்டும் மெல்ல. மெல்ல அமைதியிழந்து மௌனித்துபோகிறது. தெருக்களில் மக்கள் நடமாட்டம் குறைந்தே காணப்படுகின்றது எந்த நேரத்தில் எதுவும் நிகழும் என்ற பயம் எல்லோர் முகத்திலும் பதிந்துள்ளது.

அண்மைக்காலமாக மட்டக்களப்பு நகருக்குள் புலிகளால் நடாத்தப்பட்டுவரும் தாக்குதல்களே இவ்வாறானதொரு நிலைமையை தோற்றுவித்துள்ளது.

கிழக்கிலங்கையில் பிரசித்தி பெற்ற மாமாங்கேஸ்வரர் ஆலய தீர்த்தோற்சவத்தன்று ஆலய வளவுக்குள் வைத்து ரெலோ உறுப்பினர் வரதன் மீது புலிகள் மேற்கொண்ட தாக்குதலானது மக்கள் மத்தியில் புலிகள் இவ்வாறான நடவடிக்கைகளை மேற்கொள்வது மக்களை பாதிக்கும் நடவடிக்கையேமாகும்.

மக்கள் கூட்டமாக கூடும் இடங்களில் புலிகள் தாக்குதல் நடாத்துவதின் மூலம் இராணுவம் பொலீஸார் மக்கள் மீது தாக்குதல் நடாத்தினால் அதை தனக்கு சாதகமான பிரச்சாரமாக்கலாம் என்ற அவர்களது இலக்கு இங்கு தோற்றுப் போனதுடன் யாருக்காக போராடுகிறார்கள் என்ற கேள்வியையும் மக்களிடம் தோற்றுவித்துள்ளது.

அன்றைய தினம் இராணுவம்-பொலிஸாரின் வாகனத் தொடரணியில் பொலிஸ்வாகனத்தின் மீது தாக்குதல் நடாத்தியதின் மூலம் மக்கள் நடமாட்டமின்றி வீதிகள் வெறிச்சோடின பயத்தின் பீதியில் மக்கள் உறைந்துபோயினர்.

இத்தினமே மாமாங்கேஸ்வர தீர்த்தோற்சவ நிகழ்வதானால் மக்கள் நடமாட்டம் இல்லாததால் மக்கள் இழப்பு தவிர்க்கப்பட்டது இல்லையேல் இத்தாக்குதல் பல உயிர்களை காவு கொண்டிருக்கும்.

இதனைத் தொடர்ந்து மட்டக்களப்பு நகரை அண்டியுள்ள பகுதிகள் கறுப்பு சீருடையணிந்த இராணுவத்தினர் கவச வாகனங்களில் வந்து இளைஞர்கள் பலரை கைது செய்து விசாரணையின் பின் விடுதலை செய்யப்பட்டனர்.

மக்கள் மத்தியில் தாக்குதல் செய்வதன் மூலம் பலர் கொல்லப்படுவார்கள் பலர் தாக்கப்படுவார்கள் கைது செய்யப்படுவார்கள் அதன்மூலம் இளைஞர்கள்தமது அணியில் சேர்வார்கள் என்ற புலிகளது தந்திரோபாயம் தோற்றுப் போய்விட்டது என்பதை புலிகளில் சேரும் இளைஞர்கள் தொகை வீழ்ச்சி துல்லியமாக காட்டுக்கின்றது.

மக்களைப் பீதிக்குள்ளாக்குவதான உளவியல் தாக்கத்தால் இராணுவம் மீதான வெறுப்புணர்வு ஏற்படும் என்ற புலிகளின் நம்பிக்கைக்கு எதிர்மாறாக இவ்வாறான புலிகளது நடவடிக்கைகள் மூலம் மக்கள் புலிகளுக்கெதிராக வெறுப்படைந்துள்ளனர்.

இப்போது புலிகளினது பிஸ்டல் குழுவினர் நகருக்குள் ஊடுருவி ஜனநாயக வழிக்கு வந்த தமிழ் அமைப்புகளின் உள்ளூர்த்தலைவர்களை தீர்த்துக்கட்டும் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர். இது தமிழ் மக்கள் மத்தியிலிருந்து ஜனநாயக வழிமுறையில் தலைவர்கள் உருவாவதை இல்லாதொழிக்கும் சர்வாதிகாரகுணாம்சம் மட்டுமல்ல... ஜனநாயகவழிமுறையில் மக்கள் மத்தியில் முகம் கொடுக்க முடியாதென்ற பயத்தின் பிரதிபலிப்புமாகும்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் புலிகள் மின்சாரத்தை தடை செய்தபோது மக்கள் அவர்கள் மீது கடுமையான எதிர்ப்புணர்வை வெளிப்படுத்தினர்.

இராணுவத்தை எதிர்க்க முடியாமல் காடுகளில் நடைபெறும் யுத்தத்தில் பின்வாங்கி ஓடும்புலிகள் மக்கள் வாழும் பகுதிகளில் தாக்குதல் நடாத்துவது ஏன் என்ற குரல்கள் இப்போது மௌனத்தை உடைத்து எழுகின்றன.

"புலிகளே நீங்கள் காடுகளுக்குள் போராடுங்கள் மக்கள் வாழும் பகுதி மீது உமது தாக்குதலை தொடுக்காதீர்கள்... என்று சொல்லும் நிலைமைகள் உருவாகும்.

மட்டக்களப்பு மக்கள் மீண்டுமொரு 1990ஆண்டின் கறைபடிந்த நிகழ்வுகளை சந்திக்க தயாரில்லை... புலிகளின் இலக்கற்ற போரினால் மக்கள் மிகவும் நொந்து போயுள்ளனர். போரினால் எந்த தீர்வும் கிட்டாத இந்த போரை உண்மையிலே மக்கள்விரும்பவில்லை. நிம்மதியாக சுதந்திரமாக வாழுகின்ற காலத்தில் வாழ வழி தேடுகிறார்கள்.

புலிகளுக்கெதிராய் செயற்படும் ஜனநாய சக்திகளோடு மக்கள் மனம் விட்டு கதைக்கிறார்கள். இது புதிய தேடலுக்கான அடித்தளம் மட்டுமல்ல ஜனநாயக விரோத போக்கிற்கு எதிரானதுமாகும். மக்கள் மௌனங்களை கலைந்து ஜனநாயக சூழலை உருவாக்கும் சக்திகளுடன் இணைவதே இன்றை உடனடி கடமையாகும்.

**என். சிவசந்திரன்**

ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி
EELAM PEOPLE'S REVOLUTIONARY LIBERATION FRONT

## ஜனநாயக சக்திகளுக்கு சவால்!

தமிழர் விடுதலைக் கூட்டணி எம்.பி கலாநிதி நீலன் திருச்செல்வம் அவர்கள் கொழும்பு நகரின் மத்தியில் படுகொலை செய்யப்பட்டார் என்ற செய்தி ஜனநாயக அரசியல் நாகரீகம் தெரிந்த அனைவரையும் வெட்கப்படவும், வேதனைப்படவும் செய்யக்கூடியது.

விடுதலைப்புலிகளின் அர்த்தமற்ற இந்த படுகொலை தமிழ் பேசும் மக்களனைவரையும் ஒரு தற்கொலைப் பாதைக்கு இட்டுச்செல்லும் ஆபத்தைக் கொண்டுள்ளது என்பதற்கு இந்தச் சம்பவமும் ஒரு எடுத்துக்காட்டு.

இலங்கையின் தேசிய மட்டத்திலும், சர்வதேச அரங்கிலும் நன்கு அறியப்பட்ட கல்விமான்களில் ஒருவரான கலாநிதி நீலன் திருச்செல்வம் அவர்கள் இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வைக்காணும் மார்க்கத்தில் அர்ப்பணிப்புடன் ஈடுபட்டவர்.

இந்த அர்ப்பணிப்புடனான ஈடுபாடே அவர் அழிக்கப்படுவதற்கு காரணமாகியுள்ளமை குறித்து நாகரீக சமூகம் நிச்சயம் பெருமை கொள்ள முடியாது.

இலங்கையின் அரசியல் ஒருமைப்பாட்டை பேணியபடி இனப்பிரச்சினைக்கு நியாயமான நீடித்த நிரந்தரமான தீர்வைக்காண விரும்பும் தமிழ்த்தரப்பு ஜனநாயக சக்திகள் எதிர்நோக்குகின்ற ஆபத்துக்கள், சவால்கள், நெருக்கடிகள் இந்தச் சந்தர்ப்பத்திலாவது புரிந்து கொள்ளப்படவேண்டும். உண்மையில் அவரின் மறைவு ஈடுசெய்யப்பட முடியாத இழப்பாகும்.

கலாநிதி நீலனின் பிரிவால் துயருறும் அவரது குடும்பத்தினர், கட்சியினர், தோழர்கள், நண்பர்கள் ஆகியோரின் நெஞ்சங்களில் நிறைந்துள்ள கவலையை ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியும் பகிர்ந்து கொள்கிறது.

**க. சுரேஷ் பிரேமச்சந்திரன்**
**செயலாளர் நாயம் ஈ.பி.ஆர்.எல்.எவ்**

## அராஜகம் வேண்டாம்

வவுனியாவில் வெவ்வேறு சந்தர்ப்பங்களில் இராணுவத்தினர் மீதும், பொலிசார் மீதும் நடைபெற்றதாக்குதல்களை அடுத்து சாதாரண சிலியன்கள் மீது



சிறுமி டினேசா

தாக்குதல் நடாத்தப்பட்டுள்ளது. ரெலோ முகாம் மீது தாக்குதல் நடாத்தப்பட்டுள்ளது.

அரசியல் கட்சிகள் மீது சாதாரண சிவிலியன்கள் மீது தாக்குதல் நடத்துவது படுபயங்கரமான பின் விளைவுகளை ஏற்படுத்தும் என்பதனை சம்பந்தப்பட்டவர்கள் புரிந்து கொள்ளவேண்டும். இத்தாக்குதல் சம்பந்தப்பட்ட படையினரின் அதிகார மமதையையும், மேலாதிக்க மனோபவத்தையுமே காட்டுகிறது.

என்னதான் பிரச்சினை என்

தொடர்ச்சி 5ம் பக்கம் ☞

ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி EPRLF

22, வெளிவட்ட வீதி, வவுனியா சுரேஷ் பிரேமச்சந்திரன் அவர்களால் இரத்தனப்பிட்டிய CRC அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்படுகிறது.